Registered as Newspaper    பக்கங்கள் 06    விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025    பங்குனி 21    ( 3.4.94 )    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 44

## இந்தியாவிலிருந்து வந்தவர்கள் மீது சுகாதாரப் பகுதி தீவிர கண்காணிப்பு

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பியவர்களது மருத்துவ, சுகாதார நிலைமைகள் குறித்து யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இவர்களது பெயர் விபரங்கள் மற்றும் தங்குமிடங்கள் குறித்து தகவல் திரட்டும் முயற்சி இதன் முதல் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அடுத்த கட்டமாக இவர்கள் தேவையேற்படும் போது மருத்துவ பரிசோதனைக்கும், சிகிச்சைக்கும் உட்படுத்தப்படுவார்கள் என்றும் தொற்று நோய்களின் காவிகளாக இவர்கள் காணப்படும் பட்சத்தில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. (6ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் பதவி துறந்தாவது புலிகளுடன் பேசுவேன்

### முகமட் தெரிவிப்பு

(லண்டன்)

தனது சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்தாவது தான் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொள்ள தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா சபாநாயகர் எம். எச். முகமட் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. சிங்கள சேவையான சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியின்போதே மேற்படி கருத்தை அவர் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான எனது முயற்சிக்கு சபாநாயகர் பதவிதான் ஒரு தடையாக இருந்தால் அதனைக்கூட நான் தூக்கியெறிய தயாராக இருக்கின்றேன் என்றார்.

வடக்கு கிழக்கு யுத்தத்தை நிறுத்த மேற்கொள்ளும் ஆரம்ப நடவடிக்கையாக இது அமையும் என தான் எதிர்பார்த்ததாகவும் ஆனால் ஜனாதிபதியின் தனிப்பட்ட தலையீட்டினால் அது முறியடிக்கப்பட்டு விட்டதாகவும், தான் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவன் என்ற ரீதியிலும் (6ஆம் பக்கம் பார்க்க

## எனது அனுமதி இன்றி எவரும் புலிகளுடன் பேசக் கூடாது

### டி. பி விஜேதுங்கா உத்தரவு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதற்கு முன்பாக தம்மிடம் முன் அனுமதி பெறவேண்டும் என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார். இத்தகவல் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

வடக்கு, கிழக்கில் பயங்கரவாத பிரச்சினை இருப்பதாகதான் முன்னர் தெரிவித்ததை மீண்டும் தெரிவிப்பதாகவும் அதில் எந்த மாற்றமும் இல்லையென்றும், பயங்கரவாத பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பரிகாரமாக அமையமாட்டாது என்றும் இதுவே தமது நிலைப்பாடு எனவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

எனவே இதுவிடயமாக பேச்சுவார்த்தைகளை நடத்த முற்படுவோர் (6ஆம் பக்கம் பார்க்க)

## 1500 தாதிகள் சேர்க்க முடிவு

தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு புதிதாக ஆயிரத்து ஐந்நூறு மாணவர்களை அடுத்த மாதம் நடுப்பகுதியில் சேர்த்துக் கொள்ள இருப்பதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள பத்து தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு மேற்படி மாணவர்கள் சேர்த்துக் கொள்ள இருப்பதாகவும் இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி டி. பி. - சபாநாயகர்

# தீவிரமான கருத்து முரண்பாடு

## மேலதிக ஆசிரியரை இடம் மாற்றுக

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள அதிபர், ஆசிரியர்களை வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளுக்கு உடனடியாக இடமாற்றுமாறு சகல கோட்டப் பொறுப்பு கல்விப்பணிப்பாளர்களையும் மாகாண கல்விப்பணிப்பாளர் கே. தியாகராஜா கேட்டுள்ளார்.

இதற்கமைய மேலதிகமாக (6ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய வெற்றிடங்கள் விண்ணப்பிக்க எவருமில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 230 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. இவ்வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்த போதிலும் எவரும் விண்ணப்பிக்க முன்வரவில்லை என அரச அதிபர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்கள் பௌதிகவியல், விலங்கியல், விஞ

## வடபகுதி விஜயம் தடுப்பின் எதிரொலி

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கும் பாராளுமன்றச் சபாநாயகர் எம். எச். முகமட்டிற்கும் இடையில் தீவிர கருத்து முரண்பாடு எழுந்துள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. சபாநாயகர் முகமட்டின்

## படகுகளின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்க

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் படகுகளின் உரிமையாளர்கள் தங்கள் படகுகளைத் தத்தம் பகுதியில்

கிளாலி மற்றும் குஞ்சுப் பரந்தன், நல்லூர் படகுத்துறைகளில் எவரும் 16, 17, 18ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பதிவு செய்து

## விண்ணப்பிக்க எவருமில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 230 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. இவ்வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்த போதிலும் எவரும் விண்ணப்பிக்க முன்வரவில்லை என அரச அதிபர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்கள் பௌதிகவியல், விலங்கியல், விவசாயம், வர்த்தகம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், ஆகிய பாடங்களுக்கே உள்ளன என்றும் மேலும் 99 வெற்றிடங்கள் ஆங்கில ஆசிரியர்களுக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கும் பாராளுமன்றச் சபாநாயகர் எம். எச். முகமட்டிற்கும் இடையில் தீவிர கருத்து முரண்பாடு எழுந்துள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. சபாநாயகர் முகமட்டின் யாழ்ப்பாண விஜயத்தை இறுதி நேரத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலையிட்டு தடுத்து நிறுத்தியமையே இம்முரண்பாட்டிற்குக் காரணம் எனத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

சபாநாயகர் எம். எச். முகமட், இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கென இம்மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வரவிருந்ததும், பின்னர் டி. பி. விஜேதுங்காவின் நேரடித் தலையீட்டினால் அது தடுத்து நிறுத்தப்பட்டமையும் தெரிந்ததே.

கடந்தமாத இறுதியில், பாரிஸ் சென்றிருந்த சபாநாயகர் முகமட் தனது யாழ். விஜயத்தை முன்னிட்டே அவசர அவசரமாக 30ஆம் திகதி கொழும்பு திரும்பியதாகவும் கொழும்பு திரும்பியவுடன் யாழ்ப்பாண விஜயத்திற்கான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டதாகவும் தெரிய வருகின்றது.

ஆனால், இறுதி நேரத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா நேரடியாகத் தலையிட்டு சபாநாயகரின் பயணத்தை தடுத்து நிறுத்தியது அவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. முதலில் அனுமதி வழங்கிய அரசாங்கம், பின்னர் நொண்டிச் சாட்டொன்றைக் கூறி

(6ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் படகுகளின் உரிமையாளர்கள் தங்கள் படகுகளைத் தத்தம் பகுதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இச் சங்கங்கள் இல்லாத இடங்களைச் சேர்ந்த படகு உரிமையாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வருவாய்ப் பகுதியினருக்கும் நேரில் காண்பித்து தங்கள் உரிமையை உறுதிப்படுத்தி படகுகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இவர்கள் படகுகளை கிளாலி மற்றும் குஞ்சுப் பரந்தன், நல்லூர் படகுத்துறைகளில் எதிர்வரும் 16, 17, 18ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை பதிவு செய்து கொள்ளலாம்.

படகுகளின் பதிவை உறுதிப்படுத்தி படகுப் பதிவாளர்களால் வழங்கப்பட்ட கடிதத்தை படகுச்சேவைப் பொறுப்பாளர்களிடம் கையளித்தால் மட்டுமே படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும். பதிவு செய்யப்படாத படகுகள் கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட இசைவளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் சீரின்மையால் இடம்பெயர்ந்தோர் அவதி

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோருக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணம் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமையினால் அம்மக்கள் பாதிக்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மாதத்திற்கான நிவாரணம் குறிப்பிட்ட அந்த மாதத்தில் வழங்கப்படாமல் தாமதப் படுத்தப்பட்டு அடுத்த மாதமே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்படுகின்றது.

இது தொடர்ந்து இடம்பெற்று வரும் நிகழ்வாகும். இதனால் இடம் பெயர்ந்தோர் பெரிதும் பாதிப்படை

(6ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று சிறுவர் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

(ரணம் அள்ளச் சென்ற சிறுவர்கள் மூவர் தோட்டத்தில் இருந்த பயிற்றங்காயை பிடுங்கி சாப்பிட்டதில் மயக்கமுற்றனர்.

மருதனார்மடம் றோயல் முகாமில் வசித்துவரும் சிறுவர்களான சின்னமணி விமலநாதன் (வயது 12) மாசிலாமணி சிவேந்திரன் (வயது 12) மாசிலாமணி சுதாகர் (வயது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் தலைமையில் ரகசிய மாநாடு
## டி.பி.யை அகற்ற முயற்சி?
### விக்டர் ஐவன் தெரிவிப்பு

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமைக் காரியாலயமான 'சிறிகொத்த'வில் நடைபெற்ற இரகசிய கூட்டத்தில் டி.பி. விஜேதுங்காவை கட்சியிலிருந்து விலக்குவது குறித்து ஆராயப்பட்டதாக "ராவய" பத்திரிகை ஆசிரியரான விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இவ் இரகசிய கூட்டத்தில் தென்மாகாணசபைத் தேர்தலில் கட்சியடைந்த படுதோல்வி குறித்தும் அதற்கான காரணிகள் பற்றியும் ஆராயப்பட்டதுடன் எதிர்காலத்தில் கட்சியை தோல்வியிலிருந்து காப்பாற்றுவது குறித்தும் ஆராயப்பட்டது. இதன் போதே எதிர்காலத்தில் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் செய்யப்பட வேண்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மயிலியந்தனை படுகொலை 3 படையினர் விடுதலை

(கொழும்பு)

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பொலநறுவைக்கு அருகிலுள்ள மையிலயந்தனையில் 35 தமிழ் பொதுமக்களைக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட 24 இராணுவத்தினரில் மூவர் நீதிபதியினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இக்கொலை தொடர்பாக பொலநறுவை நீதிமன்றத்தில் நடந்த விசாரணை முடிவடைந்துள்ளது. இவ்வழக்கில் 24 படையினர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இவர்களில் மூவரே நீதிபதியினால் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய 21 படையினர் மீதான விசாரணை பொலநறுவை உயர் நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையில் சிறிலங்கா அரசபடையின் உயர் தளபதிகள் கண்ணிவெடியில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கில் மயிலந்தனையில் நடைபெற்ற இராணுவ வெறியாட்டத்தில் பல தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

## இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

வெற்றுத் துப்பாக்கி ரவைக்குள் மருந்தடைத்து பரீட்சித்தபோது அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

தம்பசாமம் பளை பகுதியில் நேற்று நடைபெற்ற இச் சம்பவத்தின் போது சிவதீஸ்வரன் (வயது 18) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார். இவரது கை விரல்கள் சிதறிக் காணப்படுகின்றன.

இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

## காமினி, டிமெல்லுக்கு எம். பி. பதவி; சிரேஷ்ட உறுப்பினர் ஆட்சேபம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற குழுக் கூட்டம் மற்றும் பொதுச்சபை, செயற்குழுக் கூட்டங்களின் போது உறுப்பினர்களிடையே பெரும் கருத்து மோதல்கள் இடம்பெறும் என கொழும்பில் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நடந்து முடிந்த தென்மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, இத் தோல்வி குறித்து ஆராயுமுகமாக இக் கூட்டங்களை அவசர அவசரமாக கூட்டும் முயற்சியில் ஐ. தே. கவினர் ஈடுபட்டுள்ளமை தெரிந்ததே. இதன்படி பாராளுமன்ற குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமையும் பொதுச்சபை மற்றும் செயற்குழு கூட்டங்கள் மறுதினமான செவ்வாய்க் கிழமையும் கூட்டுவதற்கான ஒழுங்குகளை இக்கட்சி மேற்கொண்டுள்ளதாக சிறிகொத்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியபட்டியல் மூலம் காமினி திஸநாயக்கா, றொனிடி மெல் ஆகியோர் புக முயன்று வருகின்றனர். தென்மாகாண சபை தேர்தலின் தோல்வியில் கணிசமான பங்கு இவர்களையே சாருவதால் இவர்களுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க

## அகதிகளை திருப்பியழைக்க கப்பல் வசதி இல்லை

(கொழும்பு)

தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களிலும் தடுப்புக்காவல் நிலையங்களிலும் 78,396 இலங்கைத் தமிழ் அகதிகளும் முகாம்களுக்குவெளியே 92 ஆயிரம் தமிழ் அகதிகளும் இன்னமும் இருப்பதாக சிறிலங்கா அரசு கணிப்பிட்டுள்ளது.

தமிழ் நாட்டிலிருந்து மேலும் அகதிகளை திருப்பியழைக்க தயாராக இருப்பினும் அகதிகளை ஏற்றிவர கப்பல் இல்லாதிருப்பது முயற்சிக்கு தடையாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கையில் யூ. என். எச். சி. ஆர் உதவி கிடைத்தது மூலம் 1992க்குப் பின் தமிழ் நாட்டிலிருந்து 39,604 அகதிகள் நாடு திரும்பி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**யாழ். பழைய புத்தகக் கடை**

பட்டப்படிப்பிலிருந்து பாலர் வகுப்புவரை சகல விதமான தமிழ், ஆங்கில பாடப் புத்தகங்களும் மற்றும் பத்திரிகைகளும் சமயம், சரித்திரம் சம்பந்தமான புத்தகங்களும் நியாய விலையில் விற்கவும் மலிவான விலையில் வாங்கவும் சிறந்த இடம் யாழ் பழைய புத்தகக் கடை, அரசுனா வீதி, யாழ்ப்பாணம் (7923)

**காவேரி சீயாக்காய்ப் பவுடர்**

இன்று தமிழீழத்தில் மிகவும் மக்கள் விரும்பிப் பாவிக்கும் சீயாக்காய் பவுடரின் தரம் நிரந்தரம்; சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காதீர்கள் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள் (7898)

**விற்பனைக்குண்டு**

பாவித்தசாக்குகள்மரப்பைகள்தேவைப்படுவோர் அலுவலக நாட்களில் பார்வையிட்டு தங்கள் கூறுவிலைகளை 11-04-94 க்கு முன் சமர்ப்பிக்கவும்: பொதுமுகாமையாளர் யாழ்: மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கஸ்தூரியார் வீதி, திருநெல்வேலி; (இ-8998)

**இலவச ஆலோசனை**

லண்டனில், A. C M. A., Transport, Marketing பட்டங்கள் பெற்றவர் இலவசமாக சேவை மனப்பான்மை அடிப்படையில் தமிழ் ஈழத்தின் மேல் வகுப்பு படிக்கும் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூற விரும்புகிறார். ச. கதிரமலைப்பிள்ளை, 15|3, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர், யாழ்ப்பாணம்; (7922)

**நிர்வாகிகள் தெரிவு**

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் அதன் நடப்பு ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தேர்வுப் பொதுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை அன்றுபிரதேசசபை தலைமை அலுவலக மண்டபத்தில் வலி மேற்கு பிரதேச சபை செயலாளர் திரு: க; திரவியம் தலைமையில் நடைபெற்றது:

## டி.பி. விஜேதுங்கா அமெ. அமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)

தென் ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி அமைச்சர் ரொபின் எப் ரபெல் இறிலங்கா ஜனாதிபதியை தலைநகர் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்;

நேற்று முன்தினம் காலை நிகழ்ந்த சந்திப்பின் போது இறிலங்காவில் அமுல்படுத்தப்படும் தாராள பொருளாதாரக் கொள்கை மற்றும் நாடு அடைந்த முன்னேற்றம் என்பன பற்றிஜனாதிபதி விஜேதுங்காவிளக்கமளித்துள்ளார்;

வடபகுதியில் சமாதானம் மற்றும் வழமை நிலை என்பவற்றை மீள ஏற்படுத்துவது பற்றிய அரசின் திட்டம் பற்றியும் மனித உரிமைகள் பேணப்படுவது பற்றியும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை கார்லோ கிலிஸ், அமெரிக்க தூதுவர் தெரஸிட்டாவி சாபர் மற்றும் குடியரசுக் கட்சியின் இரு தொண்டர்கள் ஆகியோரும் ஜனாதிபதியை சந்தித்துள்ளனர்.

## வீட்டினுள் குண்டுவெடிப்பு மூன்று சிறுவர்கள் பலி

ரத்கம பொலிஸ் பகுதியிலுள்ள கட்டுதம்பே என்ற இடத்தில் உள்ள வீடொன்றில் குண்டு ஒன்று வெடித்ததையடுத்து இரு சிறுவர்களும் ஒரு சிறுமியும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்; 5 பேர் படுகாயமடைந்தனர்;

அனுரா (வயது7) இந்திக (வயது 2) ஆகிய இரு சிறுவர்களும், இந்திகா (வயது 5) என்ற சிறுமியுமே உயிரிழந்தவர்களாவர்.

பத்மசிறி என்பவர் இந்தக் குண்டை வீட்டுக்கு கொண்டு வந்ததாக பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது;

தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால்
**தொழிலாளர் தினத்தை முன்னிட்டு**
நடாத்தப்படும்
## உற்பத்தி எழுச்சிவாரப் போட்டி - 1994

**போட்டிகளும் நிபந்தனைகளும்**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கடந்த மூன்று வருடமாக பல்துறைசார் தொழிலையும், தொழிலாளர்களையும் ஊக்குவிக்கும் முகமாக உற்பத்தி எழுச்சிவாரப் போட்டி நடாத்தப்பட்டுவந்தது; இவ்வருட 4-வது போட்டியின்போது கலைத்துறை சம்பந்தமான போட்டியும் நடாத்த முன்வந்துள்ளது; இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளில் பொருண்மிய அபிவிருத்தியைப் பிரதிபலிக்கும் ஆக்கங்கள் மட்டுமே வரவேற்கப்படும்;

- ○ சிறுகதை
- ○ கட்டுரை
- ○ கவிதை
- ○ நாடகம் (வானொலி)
- ○ கருத்துப்படம்

ஃ படைப்புக்கள் யாவும் போராட்ட காலத்தில் பொருண்மியத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது போன்ற ஆய்வுகள், சிந்தனைகள், உணர்வுகள் என்பவற்றைத் தூண்டக்கூடிய வகையிலும், கிராமிய பொருளாதாரத்தின் சிறப்பைத் தெளிவுபடுத்தும் வகையிலும் அமைதல் வேண்டும்;

ஃ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளி...

## ஆயுர்வேத வைத்தியம் அபிவிருத்தி வேண்டும்

**உள்ளூராட்சி உதவி ஆணையாளர்**

(நல்லூர்)

ஆயுர்வேத வைத்தியத்துறை யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி செய்யவேண்டிய துறையாகும்: அதற்கான தேவையும் இருக்கிறது- அரசின் தடையினால் மேற்கத்தேய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் இன்றைய நிலையில், இந்தத்துறை வளர்ந்தால் வைத்திய சேவையில் இன்று உள்ள நெருக்கடியை ஈடுசெய்து கொள்ளலாம் இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்;

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் ஆயுர்வேத சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற 'ஆயுர்வேத வைத்தியர், உதவியாளர் மற்றும் மருந்தாளர் கருத்தரங்கில் நேற்றுமுன்தினம் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், உதவியாளரிடமிருந்து உச்ச சேவையைப் பெறுவதற்கு அவர்களுக்குப்படி உயர்வு பதவி ஏற்றம் ஆகியன வழங்கப்படவேண்டும் ஆனால் வடபகுதியில் இவர்களுக்கு இந்த நன்மைகள் வழங்கப்படவில்லை மேலும் ஆயுர்வேத வைத்தியர் நோயாளரைத்தேடிப் போகவேண்டும் ஆனால் இந்த வழக்கம் இப்போது இல்லை நோய்த் தடுப்பு வேலைகளிலும் தங்களை ஈடுபடுத்த வேண்டும் என்றார்;

## தனிப்பட்ட தவணை பரீட்சை அதிபர்கள் பணநஷ்டத்தில்

(நல்லூர்)

கல்லூரி அதிபர்கள் தனித்தனியாகப் பாடசாலை மட்டத்தில் முதலாம் தவணைப் பரீட்சை நடத்த முற்பட்டுப் பெரும் பண நஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

வினாத்தாள்களைத் தயாரிப்பதற்கான கல்லச்சுக் கடதாசி (ஸ்ரென்சில்) கொள்வனவில் கல்லூரி அதிபர்கள் ஏமாந்து போயினர். காகிதாதிகள் விற்பனைக் கடையில் யப்பான் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட கல்லச்சுக் கடதாசிகளையே அதிபர்கள் வழமையாக வாங்கி வந்தனர்: இந்த ரகத்தைச் சேர்ந்த48 கடதாசிகள் அடங்கிய பெட்டியின் விலை 950ரூபா ஆனால், மலேசியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஸ்ரென்சிலின் விலை 650 ரூபா இதனைக் கொள்வனவு செய்த அதிபர்களுக்குப் பத்துப் பிரதிகளைக் கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மீளவும் பணச் செலவில் யப்பானிலிருந்து தரப்பட்ட கல்லச்சுக் கடதாசிகளை வாங்கும் நிலைக்கு அதிபர்கள் தள்ளப்பட்டார்கள் என்று கல்லூரி வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

## அறிவித்தல்

நாளை திங்கள் 04|04|1994 அன்னை பூபதியின் நினைவு தினத்தை ஒட்டி யாழ் ஒட்டுமடம் வீதி சிரமதானம் செய்ய இருப்பதால் சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களும் அன்றைய தினம் முழுமையாக மூடி உரிமையாளர் | தொழிலாளர் இராமியத் தொழிலாளர் அனைவரையும் திங்கள் 7. 30 மணிக்கு சங்க பணிமனைக்கு சமூகம் தருப்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

நன்றி.

**வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர்சங்கம்**
யாழ் கிளை இல :
18 ஏ. இராசாவின் தோட்ட லேன்,
யாழ்ப்பாணம்.

(7938) - நிர்வாகம்

## 1 ஆம் வருடப் பூரணத்துவ நிறைவு



## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



செல்வி
**சந்திரிகா (சந்தியா) சண்முகநாதன்**
(3-ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை)

பிறப்பு: 11 - 06 - 1991 இறப்பு: 05 - 03 - 1994

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தபோது
அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையிலே
உனை இழந்தோம்! மனம் துடித்தோம்
நீ எமக்கு ஆறுதலைக் கூறிடுவாய் !!

செல்வி சந்திரிகா கடும் நோயுற்றிருந்தபோது, உதவிகள் புரிந்த சுற்றிகை, யாழ். வைத்திய மனைகளின் ஊழியர்கட்கும், மற்றும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன். இன்று (3 - 4 - 94) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் சந்தியாவின் 31-ம் நாள் நினைவு தினத்திலும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சனாய், பருத்தித்துறை; 8-4-94 — (7924) — ச. சண்முகநாதன் (நாதன் மில் பருத்தித்துறை) குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்..., 1994-04-03

1985-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - புல்லுமலையில் இறிலங்கா அதிரடிப்படையினரிடம் கைதாகி வருகையில் கொடுவாமடுப்பகுதியில் ஈரோஸ் அமைப்பின் குண்டுவெடிப்பில் சிக்கியதில் வீரச்சாவெய்திய,

**தவராசா** (சி. தவராசா - புல்லுமலை-மட்டு)

**ராஜன்** (- - புல்லுமலை - மட்டு)

இச்சம்பவத்தில் பலியான ஆதரவாளர்

**ரெட்ணம்** (புல்லுமலை - மட்டு)

1988-ம் ஆண்டு யாழ்-இளவாலையில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்

லாளர் திரு. க. திரவியம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அராலி உபஅலுவலகப் பொறுப்பதிகாரி திரு. க. பாலசுப்பிரமணியம், சங்கானை உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. பொ. சண்முகநாதசிவம் உட்பட சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். நடப்பு ஆண்டிற்கான புதிய நிர்வாகிகளாக மூளாய் ஸ்ரீகணேச சனசமூக நிலையத்தை சேர்ந்த திரு. க. செல்வராசா தலைவராகவும், வட்டுக் கிழக்கு அறிவொளி சனசமூகத்தை சேர்ந்த திரு. வே. சிவலிங்கம் செயலாளராகவும், சங்கானை தொட்டிலடி சனசமூக நிலையத்தை சேர்ந்த திரு. வ. சண்முகம் பொருளாளராகவும் மொத்தம் 13 பேர்கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் ஏகமனதாக தெரிவாகினர். (41)

ஃ ஃ

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ஆனைக்கோட்டை உப அலுவலகத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்களுக்கான உப சமாசத்தின் நடப்பு வருட புதிய நிர்வாகிகள் தெரிவு பொதுக் கூட்டம் அண்மையில் அலுவலக மண்டபத்தில் உபஅலுவலகப் பொறுப்பதிகாரி திரு. த. சரவணலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது முருகானந்தா சனசமூகநிலையத்தை சேர்ந்த திரு. அ. ஜெயக்குமார் தலைவராகவும், திருவள்ளுவர் சேவா மன்றச சநிலையத்தை சேர்ந்த திரு பொன். கனகரத்தினம் செயலாளராகவும், மணிமேகலை சனசமூக நிலையத்தை சேர்ந்த திரு. செ. இளமுருகன் பொருளாளராகவும் இவர்கள் உட்பட மொத்தம் 27 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர். (41)

---

படுத்தும் வகையிலும் அமைதல் வேண்டும்;

ஃ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல்வேண்டும்;

ஃ ஆக்கங்கள் இதற்குமுன் பிரசுரமானதாகவோ அல்லது வேறெங்கும் பிரசுரம் செய்வதற்குக் கையளிக்கப்பட்டதாகவோ இருத்தல் கூடாது

ஃ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்;

ஃ சிறுகதைகள், கட்டுரைகள் ஆகியன சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்;

ஃ நாடகம் வானொலியில் ஒலிபரப்புவதற்கு ஏற்ப 10 நிமிடத்திற்குப்பட்டதாக இருத்தல்வேண்டும்;

ஃ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட்டு இருப்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்தவேண்டும்;

ஃ போட்டிக்கான ஆக்கங்கள் யாவும் ஏப்ரல் 15-ம் திகதிக்குப் பிந்தாமல் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், யாழ் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

ஃ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அலுவலர்கள் இப்போட்டியில் பங்குபற்றுவது தவிர்க்கப்பட்டுள்ளது;

ஃ போட்டியில் வெற்றி பெறுபவர்கள் பெயர், விபரம் பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

ஃ ஒவ்வொரு துறையிலும் முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு 94-ம் ஆண்டு தொழிலாளர் தின நிகழ்வின் போது பரிசில்கள் வழங்கப்படும் (பரிசில்கள் மாவட்ட மட்டத்திலேயே வழங்கப்படும்)

ஃ போட்டி பற்றிய ஆசிரியர் குழுவின் இறுதித் தீர்ப்பே முடிவானதாகும்;

ஃ ஆக்கங்கள் யாவும்,

"4-வது உற்பத்தி எழுச்சி வாரப் போட்டி-94"

என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு

**தமிழீழ**

**பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**

யாழ் மாவட்டச் செயலகம்

இருபாலை வீதி - கோண்டாவில்.

என்னும் முகவரிக்கு நேரிலோ தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்

(இ-8997)

---



# அமரர் நமசிவாயம் குமாரசாமி

(முன்னாள் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்)

தோற்றம்: 1913 08 . 24

மறைவு: 1993 . 04 . 03

திதி:- ஏகாதசி 23 . 03 . 1994

பப்பாவே! நின் வழிதப்பாமல்...
... உனை அஞ்சலிப்போம் ...
எம் வாழ்வில் எப்போதும்!

கு. சூரியகுமார் (மகன்) -குடும்பத்தினர்

ஆசிரியர்
யா - ஏழாலை ம. வி

இல 6, துளசிவாசம
பிரதான வீதி,
அளவெட்டி.

(7929)

---

ரெட்ணம் (புல்லுமலை - மட்டு)

1988-ம் ஆண்டு யாழ்-இளவாலையில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

முரளி (........ –)

1991-ம் ஆண்டு மன்னார் -நானாட்டான்-பகுதியை நோக்கி முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

2-ம லெப். வசிட்டன் (மாணிக்கரஞ்சன் நாகராசா -நானாட்டான்-மன்னார்)

2-ம் லெப். சுந்தரம்பிள்ளை (திருச்செல்வம் சகாயநாதன்- வாழ்க்கைப்பட்டான் கண்டல்-மன்னார்)

மகாலிங்கம் (இராசையா புண்ணியமூர்த்தி-செட்டியார்கட்டை, அடம்பன்-மன்னார்)

புவிராஜ் (யோ. ஜோன்சன் - பெரியகட்டு, செட்டிகுளம்-வவுனியா)

வவுனியா-பம்பைமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

துரோணர் (இலட்சுமணன் விநாயகமூர்த்தி- இரணை இலுப்பைக்குளம் - வவுனியா)

யாழ்-சாவகச்சேரி நகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

கண்ணன் (அரியரட்ணம் யூட்மேரி ஜோர்ஜ்-சரம்பன் தெற்கு, ஊர்காவற்துறை-யாழ்)

1992-ம் ஆண்டு யாழ்-புன்னாலைக்கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவக்காவலரண் தகர்ப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய.

கப்டன் கண்ணன் (தர்மலிங்கம் அம்பிகைபாலன்- சிறுப்பிட்டி தெற்கு-நீர்வேலி யாழ்)

1993-ம் ஆண்டு மட்டு-கிரான், கின்னவேம்பு பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

றெஜி-கவிராஜன் (சண்முகம் தோத்திரலிங்கம்- சந்திவெளி-மட்டு)

யாழ்-கட்டுவன் காவலரண்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய.

லெப். வெருந்தேவன் மோகன் (சேனாதிராஜா குகதாசன்-சங்கிலியன்வீதி, நல்லூர்)

மட்டு-கிரான், கின்னவேம்பு பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான மட்டு-கோரக்கல்மடுவைச் சேர்ந்த 2 பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-899

யாழ்ப்பாணம்

# இலக்கியத்தில் புதிய எழுத்தாளர்கள் காலத்தின் பதிவுகளை செய்கின்றனர்

**- புதுவை இரத்தினதுரை**

(யாழ்ப்பாணம்)

இந்த நூலாசிரியர் தமது கதைகளில் காலத்தை பதிவு செய்துள்ளார். பெரிய எழுத்தாளர்கள் பலர் எழுதாத நிலையில் ஆரம்ப எழுத்தாளர்கள் தமது ஆற்றலைவெளிப்படுத்தி, இலக்கிய படைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் 'இமைவிதர்கள்' சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழாவில் தலைமை வகித்துப் பேசும் போது குறிப்பிட்டார் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசும்போது இலக்கியம் என்பது ஒரு காலத்தின் பதிவாக அமைய வேண்டும். இந்த நூலில் உள்ள சில கதைகளில் இது வெளிப்படுகின்றது.

இந்த எழுத்தாளர் நிறைய இலக்கிய படைப்பில் ஈடுபட வேண்டும் என்றார்.

து. வைத்திலிங்கம் அங்கு பேசும் போது ஈழத்து எழுத்தாளர்கள் சுபமங்களாவிலும் கணையாழியிலும் தமது படைப்புகள் பிரசுரமானால் தான் தமக்கு இலக்கிய அங்கீகாரம் கிடைக்கும் என கருதக்கூடாது இந்த எண்ணத்தை கைவிடவேண்டும் என்றார்.

நூலாசிரியர் சந்திரா தனபாலசிங்கம் பதிலுரையாற்றினார். (தி)

## மீனவர் நிவாரணம் மார்ச்-01 உடன் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மீனவர்களுக்கான நிவாரணம் கொடுப்பனவு கடந்த பெப்ரவரி மாதத்துடன் நிறுத்தப்பட்டுவிட்டதாக யாழ் செயலக புனர்வாழ்வு பிரிவு அறிவித்துள்ளதாக 'புலிகளின் குரல்' வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா அரசு பிறப்பித்த கடல்வலயத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தொழில்களை இழந்திருந்தன. இதனால் இவர்களுக்கு மீனவர் நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது தெரிந்ததே.

கடல்வலயத்தடைச்சட்டம் நீக்கப்பட்டதால் இந் நிவாரணக் கொடுப்பனவை மார்ச் முதலாம் திகதியுடன் நிறுத்துமாறு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுதமக்கு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அனுப்பட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக திட்டமிடல் பணிப்பாளர் புலிகளின் குரல் வானொலிக்கு தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் முதல் திருமலைவரையிலான கடல்வலயத்தடைச்சட்டத்தை நீக்கும் உத்தரவு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் இது நீக்கப்படும் வரை மீனவர்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை தொடர்ந்து வழங்குமாறு சகல அரசாங்க அதிபர்களுக்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா அண்மையில் அறிவித்ததாகக் கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. கிறிஸ்டி சில்வா கடல்வலய தடைச் சட்டத்தை நீக்க பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

## சாரணிய ஆர்வமுடைய ஆசிரியர்களுக்கு பயிற்சி

யாழ். மாவட்டத்தில் இயங்கும்சாரணர்சங்கக்கிளையாழ் மாவட்டத்தில் இயங்கும்பாடசாலைகளில் புதிய சாரணர் குழுக்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இதன் யாழ் மாவட்ட ஆணையாளர் இ. மகேந்திரன் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சாரணியச் செயற்பாடுகளில் ஆர்வமுடைய ஆசிரியைகள் இதில் பயிற்சி பெறும் நோக்குடன் பதிவுக் கட்டணமாக 100/- ரூபாவைச் செலுத்தி இப் பயிற்சி நெறியில் பயில அனுப்பி வைக்குமாறு இவர் சம்பந்தப்பட்ட அதிபர்களைக் கேட்டுள்ளார். இப்பயிற்சிநெறியைத் திருப்திகரமாக முடிந்தவர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார் (17)

## 52-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமைப்பு வேலைகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மணியரசன் குடியிருப்பில் கப்டன் இராவணன் (கோணேஸ்) படிப்பகம், முதலுதவி சிகிச்சை நிலையம், நிர்வாக அலுவலகம் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன. அமைப்புவேலைகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ள இவற்றின் திறப்பு விழா இம்மாத நடுப்பகுதியில் நடைபெறும் என குடியிருப்பின் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

## மன்னாரிலும் பொலிஸ் பதிவு

(மன்னார்)

மன்னார் தீவுப்பகுதியில் நிரந்தரமாக வசிப்போரும் தற்காலிகமாக வசிப்போரும் பொலிஸ் நிலையத்தில் தமது பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டுமென பொலிசார் அறிவித்துள்ளனர். இதனால் தினமும் நாற்றுக்கணக்கானோர் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் கூடி நிற்கின்றனர்.

## மலேரியா வார சிரமதானப் பணி

(கொழும்புத்துறை)

சரசாலை வடக்கு மலேரியா தடுப்பு சுகாதாரக் குழுவினர் கிராம சேவகர் திரு. எஸ். சிவராசா தலைமையில் சரசாலை வடக்கு சனசமூக நிலையம் ஒத்துழைப்புடன் பிரதான வீதிகளைச் சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்தனர்.

நிலையத்தினர் இப் பகுதிப் பொதுக்கிணறு ஒன்றையும் சிரமதானப் பணிமூலம் இறைத்து துப்பரவு செய்தனர்.

இந்நிகழ்வில் திரு செ. கந்தசாமி, திரு. ஆ. ஜெயபாலன் சரசாலை இந்துமன்றத் தலைவர் திரு கு. ஞானேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (24)

## மாவீரர்களின் ஆயுதங்கள் புது கரங்களில் வரவேண்டும்

**அஞ்சலி நிகழ்வில் உரை**

(யாழ்ப்பாணம்)

''மரணம் எங்கள் மரபாகிப் போனபின்னர் மரணம் எங்களை என்ன செய்யும்...? என்று மரணத்தை நோக்கி மந்தகாசமான சிரிப்போடு சென்று, இன்று கல்லறைகளிலே துயில்கின்ற மாவீரர்கள் என்றென்றும் எம்மால் போற்றப்படவேண்டியவர்கள். இந்த மண்ணையும் மக்களையும் நேசித்ததால் இவர்கள் மாவீரர்கள் ஆனார்கள் இந்த மண்ணும் மக்களும் விடுதலை அடைய வேண்டும் என்ற இலட்சியக் கனவோடு உறங்கிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு நம் செய்யும் உண்மையான அஞ்சலி அவர்கள் விட்டுச்சென்ற பணியை தொட்டு முடிப்பதுதான்.

குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. தேவன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய செல்வி நாமகள் ''அன்று பூப்போன்றவர்கள், மென்மையானவர்கள் என்று கூறப்பட்ட பெண்கள் இன்று எதையுமே சாதிக்கக் கூடியவர்கள் எனப் போற்றப்படுகின்றனர். இதற்கும் தமிழன் தன்மானம் மிக்கவன் யாருக்குமே தலைவணங்காதவன் என்று உலகமே போற்றி எமது போராட்டத்தை உன்னிப்பாக அவதானிப்பதற்கும் காரணம் விதையாகிவிட்ட எமது மாவீரர்கள் தான். இத்தகைய புனிதமான மாவீரர்களுக்கு நேரம் காலம் நோக்காது அனைவரும்

## ஹிங்குரான்கொட

# விமான நிலையம் தரமுயர்த்தல் கைவிடப்பட்டது

(கொழும்பு)

ஹிங்குரான்கொடயில் உள்ள விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தும் திட்டத்தைக் கைவிடுவது என அரசு தீர்மானித்துள்ளது

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா 1991-ம் ஆண்டு இடம்பெற்ற பிரதேச சபை தேர்தல் பிரசாரத்தின்போது ஹிங்குரான்கொட விமான நிலையமும் சர்வதேசவிமான நிலையமாக தரமுயர்த்தப்படுமென அறிவித்தார். இதைத் தொடர்ந்துசர்வதேசவிமான நிலைய நிர்மாணத் திட்டம் வகுக்கப்பட்டது. அதனை அமுல்செய்ய ஆலோசனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைகளும் இங்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் இந்த சர்வதேச விமான நிலைய நிர்மாணத்திற்கு உதவக்கூடிய நிதி உதவித்திட்டம் எதுவும் கிடைக்காது என்பது தற்போது அரசின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டுள்ளது. சர்வதேச விமான நிலையம் ஒன்றை அமைக்க கணிசமான அளவில் நிதி தேவைப்படும் என அரசிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்த சர்வதேச விமான நிலைய நிர்மாணத் திட்டத்தை அமுல்படுத்துவதில்லை என அரசு இப்போது தீர்மானித்துள்ளது

ஆனால் விமானப்படையின் பாவனைக்கென வசதிகள், சீர்திருத்தங்கள் அங்கு மேற்கொள்ளப்படும்.

## சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

(தொல்புரம்)

ஆனைக்கோட்டை சுழானடிப் பகுதியில் வான் ஒன்றுடன் சைக்கிள் மோதுண்டதில் சைக்கிளில் சென்ற இருவர் படுகாயமடைந்தனர்

இவ் விபத்துச் சம்பவத்தின் சைக்கிளில் சென்றவர்களான நவாலி தெற்கைச் சேர்ந்த செல்வராசா பிரதீஸ் (வயது 15), தம்பு இராஜேந்திரம் (வயது 37) ஆகியஇருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ், போதனா வைத்திய சாலையில் கடந்த வியாழன் மாலை அனுமதிக்கப்பட்டனர். இவ்விபத்துச் சம்பவம் பற்றி காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர். என தெரியவருகின்றது. (43)

## திறப்பு விழா

நல்லூர் வர்த்தகத்திணைக்கள கிளை திறப்பு விழா நாளை 4ஆம் திகதி

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர்நிர்மாண நிதிக்காக படுமீன் கழகம் நடத்தும்

**உதைபந்தாட்ட இறுதிப்போட்டி**

காலம்: 03-04-94 ஞாயிறு பிற்பகல் 3.00 மணி

இடம்: யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானம்

மூன்றாம் இடத்திற்கான போட்டி

**சென் அன்ரனீஸ் எதிர் யங் ஹென்றீஸ்**

வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டி

**படுமீன் எதிர் ஞானமுருகன்**

பிரவேசம்: ரூபா 10/-

விளம்பர அன்பளிப்பு:

இரத்தினா களஞ்சியம்,

பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

(7925)

**புத்தாண்டு கால சிறப்பு சேவை**

சகலபொருட்களும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும்

ஆண், பெண் சிறுவர் சிறுமியர் தையல் வேலைகளிற்கும்

அன்பளிப்புகளிற்கான அன்பளிப்பு மடல்களிற்கும்

எமதுமாதாந்த பரிசுத்திட்டத்தில் பரிசுகள் பெறுவதற்கும்

**எழிலகம்**

மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

குறிப்பு:- மார்ச் மாதத்திற்கான பரிசுச்சீட்டிழுப்பு 5-4-94 காலை 11.00மணியளவில் நடைபெறும்.

(இ-8996)

## நன்றி நவிலலும்



அன்னையின்
மடியில்
12.04.1918

அம்மனின்
திருவடியில்
11.02.1994

### திரு. ஆறுமுகம் கந்தையா
(இணுவில் மேற்கு)

அன்னார் பரமானந்தவல்லி அம்மன் கோவில் அறங்காவலரும், சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க இணுவில் மேற்கு கிளை 13 கிளைக்கு முத் தலைவரும், சமூக-சமயத் தொண்டருமாவார்;

எமது அன்புத்தெய்வம் சுகவீனமுற்று யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்த பொழுதும், பின்பு இறுதிக்கிரியைகளிலும் கலந்து கொண்டு மற்றும் சகல விதத்திலும் உதவிகளைச் செய்து தவிய யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், மருத்துவபீட மாணவ நண்பர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்புள்ளங்கள் அனைவரிற்கும் எமது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்;

03-04-1994 ஞாயிற்றுக்கிழமை எமது 'பழமுதிர் சோலை' இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்;

அன்புடன்
மருமகன் - வைத்திய கலாநிதி S.K நாதன்
(மஸ்கெலியா)
மகள் - திருமதி கு. புனிதவதி
பேரன் - கு. சந்திரகுமார் (யாழ் மருத்துவபீடம்)
பேர்த்திமார் - கு. தவைநந்தி (யாழ் மருத்துவபீடம்)
கு செல்வநந்தி (யாழ், விஞ்ஞானபீடம்)
மகன் - திரு. A.K. விவேகானந்தன் (இலண்டன்)
மருமகள் - திருமதி வி. ரேணுகா
பேர்த்தி - வி கௌசிகா
பேரன்மார் - வி. நிஷாகரன், வி. ஹரிகரன்

'பழமுதிர்சோலை'
கந்தசாமி கோவில் றோட்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(7919)

உறங்கிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு நம் செய்யும் உண்மையான அஞ்சலி அவர்கள் விட்டுச்சென்ற பணியை தொட்டு முடிப்பதுதான். அவர் தம் கைகளில் இருந்து சாய்ந்த ஆயுதங்கள் புதிய கரங்களில் தவழ வேண்டும். எமது விடுதலைப் போராட்டம் வெற்றிபெற அனைத்து மக்களும் பேரில் இணைந்து எதிரிபடையை துவம்சம் செய்யவேண்டும். இதுவே மாவீரரின் இலட்சியக்கனவை நனவாக்க ஓரே வழி ஆகும்" இவ்வாறு சென்ற புதன் கிழமை இரவு நாவற்குழி வவனிதா குடியிருப்பில் நடைபெற்ற 9, 10, 11, 12 ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த தீவகக் கோட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டத்தில் நினைவுரை ஆற்றிய விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் தீவகக் கோட்டப் பொறுப்பாளர் செல்விநாமகள் தெரிவித்தார்;

காரணம் விதையாகிவிட்ட எமது மாவீரர்கள் தான். இத்தகைய புனிதமான மாவீரர்களுக்கு நேரம் காலம் நோக்காது அனைவரும் போராட்டத்தில் இணைவதன் மூலம் எதிரி படையை துவம்சம் செய்து விரட்டி அடித்து எம் தேசத்தை விடுவித்து அவர்தம் இலட்சியக் கனவை நனவாக்கி வைப்போம்" என்றும் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் மாவீரர் ளின் திருவுருவப் படங்களுக்கு அவர்களின் பெற்றோர்களும் போராளிகளும் ஈகச்சுடர்களை ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்; மகளிர் அமைப்பின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன்தியாகம் ஆகியோரும் நினைவுரை நிகழ்த்தினார்கள், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(22)

## பெற்றோர் அசிரத்தை சிறுவன் தீக்கிரை

### கல்குடாவில் சம்பவம்

மகனை வீட்டில் தூங்க வைத்துவிட்டு தொலைக்காட்சியில் படம்பார்க்கச்சென்ற பெற்றோர்கள் திரும்பி வந்து பார்த்தபோது மகன் தீயில் கருகிக் கிடந்த சம்பவம் ஒன்று கல்குடாவில் நடைபெற்றுள்ளது.

மகனை வீட்டில் உறங்க வைத்துவிட்டு பெற்றோர்கள் தமது கைக்குழந்தையுடன் படம் பார்க்கச் சென்று விட்டனர். அவ்வேளை குப்பி விளக்கு ஒன்று உறங்கிக்கொண்டிருந்தசிறுவனுக்கு அருகில் எரிந்து கொண்டிருந்தது. உறக்கநிலையில் அச்சிறுவன் தன்னையறியாது புரண்டுபடுத்த போது குப்பி விளக்கு தவறுதலாக சரிந்து விழுந்து அதனால் பரவிய தீ உறக்கத்தில் இருந்த சிறுவனை முழுமையாக பரவியது. சிறுவன் போர்த்திருந்த சேலையில்தீப்பற்றியதால்சிறுவனுமுற்றாக எரிந்தான்

படம் பார்த்துவிட்டு வந்த சிறுவனின் பெற்றோர் எரிந்து கிடந்த மகனைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர் குற்றுயிராகக் கிடந்த சிறுவனை அயலவர் உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோது சிறுவன் மரணமானான்

### பெறுபேறு

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற 1992 ஆம் கல்வியாண்டிற்கான இறுதிப்பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது

படம்வரை பயிலுனர் போதிப்படுத்தல் மின் இணைப்பு வியாபார கற்கைகளிலான தேசிய தராதரப்பத்திரம்: ஆகிய கற்கை நெறிகளுக்கான இறுதிப் பெறுபேறுகள் யாழ்தொழில் நுட்பக்கல்லூரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளது

### திறப்பு விழா

நல்லூர் வர்த்தகத்திணைக்கள கிளை திறப்பு விழா நாளை 4ஆம் திகதி காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது

குறிப்பு:- மார்ச் மாதத்திற்கான பரிசுச்சீட்டிழுப்பு 5-4-94 காலை 11.00மணியளவில் நடைபெறும்;

(ஓ-8996)


வடமராட்சி மக்களிற்கு...

ஓர் அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு...

# எழினி புடவை வாணிபத்தினரின்

# மா பெரும் மலிவு விற்பனை!

சிவன்கோவில் அருகாமை பிரதான வீதி, பருத்தித்துறை

**03-4-94 -- 04-4-94** வரை

20% தொடக்கம்- 50% வரை விலை கழிவுகள் உண்டு!

வியாபாரிகளிற்கும் தையல் நிலையத்தினருக்கும்
விசேட கழிவுகள் உண்டு!

சிறியோர் முதல் பெரியோர் வரை
ஆடவர், பெண்கள் அனைவர்க்கும்
வேண்டிய உடைகள்! துணிவகைகள்!
கதவு, யன்னல், திரைகளிற்கு ஏற்ற துணிவகைகள்!

உங்கள் தெரிவிற்கு முந்துங்கள்!

எழினி புடவை வாணிபம்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-8988)

# தேர்தல் மோசடிகளை விசாரிப்பதே முதற்பணி

## -தென்மாகாண முதலமைச்சர்

(கொழும்பு)

தேர்தல் ஊழல்கள் வன்செயல்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கான ஆணைக்குழு வொன்றை நியமிப்பதே எனது முதற்பணியாக இருக்கும் என தென் மாகாண சபையின் முதலமைச்சராக பதவி ஏற்றுள்ள அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

நடந்து முடிந்த தென் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக எனக்கு பல புகார்கள் கிடைத்துள்ளன. எனவே இக்குற்றச்சாட்டுகளை விசாரிப்பதே எனது முதற்பணியாக இருக்கும். தேர்தலின் பின்பும் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களும் வாக்காளர்களும் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு இலக்காகியுள்ளனர்.

கடந்த சில தினங்களாக கொலைகள் உட்பட பல்வேறு வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தேர்தல் காலத்தில் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது தேர்தல் கடமைகளை செய்யும் போது இழைத்ததாகக்கூறப்படும் பல ஊழல்கள் தொடர்பாக எனக்கு தெரியவந்துள்ளது. தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட சில அரச அலுவலர்களும் பக்கசார்பாக செயல்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. தேர்தலில் ஊழல்கள் மோசடிகள் இடம்பெற்றிருப்பின் அது மக்கள் கருத்துக்கு ஏற்பட்டுள்ள பெரும் சவாலாகும் இவ்வாறான செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதாகவுமிருக்கிறது என்று அவர் கூறினார்.

# ஐ.தே.க இனவாத பேச்சு தேர்தல்தோல்விக்குகாரணம்

(கொழும்பு)

தென் மாகாணத் தேர்தலில் ஐ.தே.க தோல்வியடைந்தமைக்கு இனவாதப் பேச்சும் ஒரு காரணம் ஆகும். தென் மாகாணத் தேர்தலில் ஐ.தே.க விற்கு ஏற்பட்ட தோல்வி தொடர்பாக விபரமாக ஆராய்ந்து வரும் மூத்த உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு கருதுகின்றனர்.

தென் மாகாணத்திலுள்ள சுமார் முப்பதாயிரம் தமிழ் வாக்காளர்களில் வாக்குகளை முழுமையாகப் பெற முடியாமையும் முஸ்லிம்களின் வாக்குகளை முழுமையாக இருந்தமையும் இனவாதப் பேச்சுக்களின் பெரும் விளைவே ஆகும். இதனை புள்ளிவிபரங்களுடன் சுட்டிக்காட்டியுள்ள இவ் உறுப்பினர்கள் மேலும் கூறுகையில், இனவாதப் பேச்சுக்கு தென் மாகாண மக்கள் ஒத்துழைப்பு வழங்காமையும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் சகாக்களும், சகாக்களும் தேர்தல் பிரசாரத்தில் ஓரம் கட்டப்பட்டமையும் தோல்விக்கு துணையாகி இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

# சிறுபான்மையின் வெறுப்பே தோல்விக்கு வித்திட்டது

(கொழும்பு)

சிறுபான்மை இனங்களின் அதிருப்தியே தென்மாகாணத்தில் ஐ.தே.கவின் தோல்விக்குப்பிரதான காரணமாகும் என்று முன்னாள் அமைச்சரும், ஐ.தே.கவில் மீண்டும் இணைந்துள்ளவருமான காமினி திசாநாயக்க கூறியுள்ளார். அவர் இதுதொடர்பாக மேலும் கூறுகையில், இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை இத்தேர்தல்முடிவு வலியுறுத்துகிறது எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தென்மாகாணத்தில் எதிர்க்கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகளில் பெரும்பாலானவை பிரயோகிக்கப்பட்ட விவகாரத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டவை எனவும், தேர்தல் காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள், இதனால் பொது மக்களுக்கு ஏற்பட்ட துன்பம், விலைவாசி உயர்வு, என்பன போன்றவையும் தேர்தல் முடிவுகளைப் பாதித்துள்ளன எனவும் குறிப்பிட்டார்.

# மாபொல விண்ணப்பங்கள் அனுப்பி வைப்பு

1992/1993ஆம் பல்கலைக்கழக கல்வி ஆண்டுக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கு "மகாபொல" புலமைப் பரிசில் வழங்குவதற்கான விண்ணப்ப படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக வாணிப துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதும் கூடிய விரைவில் அவற்றை பூர்த்தி செய்து தமக்கு அனுப்பி வைக்குமாறும் எதிர்காலத்தில் மகாபொல திட்டத்தை மேலும் விரிவாக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 5000 புதிய படையினர்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திற்கு இம் மாதம் மேலும் 5,000 படையினர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நேர்முகப்பரீட்சைகள் ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெறும்.

## உதைபந்தாட்டம்

புனித யாகப்பர் தேவாலய புனரமைப்பிற்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பும் இன்று ஞாயிறு மாலை 3 மணியளவில் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## கலிபர் தாக்கு

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணியளவில் பொன்னாலைப் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இச்சம்பவத்தின்போது சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. (41)

# நரசிம்மராவை அ. தி. மு. க சந்தித்தது ஏன்?

## வாழப்பாடி கேட்கிறார்

(சென்னை)

இந்திரா காங்கிரசுடன் கூட்டணி தேவையில்லை என்றால் அ.தி.மு.க எம்.பிக்கள் பிரதமர் பி.வி. நரசிம்மராவைச் சந்தித்துப் பேசியது ஏன்? என்று வாழப்பாடி இராமமூர்த்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

நிருபர்கள் மத்தியில் பேசிய வாழப்பாடி இராமமூர்த்தி மேலும் கூறுகையில், சீ. சீ. இந்தப் பழம் புளிக்கும் என்று நரி ஓடிய கதையாக வாலறுந்த நரியாக இன்று அ.இ.அ.தி.மு.க காணப்படுகிறது. கடந்த இரண்டு மாத காலமாக அ.இ.அ.தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி நீடிக்கும் என்று செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்த போது எஸ்.டி. சோமசுந்தரம் அதை மறுக்காமல் தூங்கிக் கொண்டிருந்தாரா?

திடீரென்று இந்த அறிக்கை பொதுச் செயலாளர் அனுமதியுடன் வருகிறது என்று சொல்லும் எஸ்.டி. சோமசுந்தரம் இது நாள் வரையிலும் தனது பெயரில் வந்த அறிக்கையை பொதுச் செயலர் அனுமதியின்றி வந்தது என்று கூறுகிறாரா?

எப்படியாவது காங்கிரசுடன் உறவு வைத்துக் கொண்டால் தான் ஆட்சியை நிலை நிறுத்திக் கொள்ள முடியும் என்ற நிலையிலும், எங்கே தனது ஆட்சியை நிலை நிறுத்த முடியும் என்ற நிலையிலும், எங்கே தனது ஆட்சி பறிபோய்விடுமோ என்று பயந்த நிலையிலும் அ.தி.மு.க காங்கிரசின் கதவைத் தட்டுவதை மறுக்க முடியாது.

தமிழகத்திலும், டெல்லியிலும் சில ஏஜென்டுகள் மூலம் காங்கிரசுடன் கூட்டணி ஏற்படுத்த ஊழல் செய்த பணத்தில் கோடி கோடியாக வாரி இறைப்பது எங்களுக்கு தெரியாதது அல்ல என்றும் தெரிவித்தார்.

## புகைப்பிடிக்க சிறையில் தடை

(டில்லி)

புதுடில்லியிலுள்ள திகார் சிறைச்சாலையில் புகைபிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எட்டாயிரத்திற்கும் அதிகமான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இச்சிறையில் இருக்கும் கைதிகளும் ஊழியர்களும் புகைபிடிப்பது உடல்நலத்திற்கு கேடானது என்ற காரணத்திற்காக தடை செய்யப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீருக்கு பாகிஸ்தான் உதவக் கூடாது

## பிரிட்டிஷ் தொழிற்கட்சி

(லண்டன்)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் போராடும் தீவிரவாதிகளுக்கு உதவி வழங்குவதை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று பிரிட்டனின் தொழிற்கட்சி பாகிஸ்தான் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

லண்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் எல்லைக்கு அப்பாலிருந்து ஆயுத உதவியை தீவிரவாதிகள் பெறுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய போதுமான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் ஜம்மு காஷ்மீருக்கு விஜயம் செய்த இவர் இந்திய அரசினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சிலரையும் சந்தித்துப் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமாதான கூட்டமைப்பில் ரஷ்யா இணையும்

(மாஸ்கோ)

சமாதானத்திற்கான நேச நாடுகளின் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளும் ஒப்பந்தத்தில் ரஷ்யா இம் மாதப் பிற்பகுதியில் கைச்சாத்திடலாம் என்று வெளிநாட்டமைச்சர் அந்திரே கொசிரேவ் கூறியுள்ளார்.

எனினும் இராணுவ ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் இறுதிமுடிவை எடுப்பதற்கு ரஷ்யாவிற்கு மேலும் ஆறு அல்லது ஏழு மாதங்கள் செல்லும் என்று அமைச்சரின் உதவியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பின் மூலம் தப்பபிப்பிராயம் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

# தி. மு. க. மகளிருக்கு உதவியதை பத்திரிகைகள் கண்டுகொள்ளவில்லை

## கருணாநிதி கவலை

மகளிருக்கென பல திட்டங்களை கழகம் ஆட்சியில் இருந்த போது வகுத்தளித்து வகைப்படுத்தி செயல்படுத்தியது. அப்போது பத்திரிகைகள் அவற்றைக்கண்டு கொள்ளவே இல்லை. ஆனால் இப்போது அம்மணியின் பாதாதிகேசம்வரை பாராட்டு மழை பொழியப்படுகிறது. இவ்வாறு தி.மு.க தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

முரசொலி நாளேட்டில்உடன்பிறப்புகளுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

பார்வையாளர்களின் முதல் வரிசையிலும், அதைத்தொடர்ந்து இருந்த வரிசைகளிலும் பெரும்பாலும் ஆடவர்களே வீற்றிருக்க ஏதோ சாத்திரத்திற்கு என்பார்களே அதுபோல ஒன்றிரண்டு மகளிரும் அரிதாகத்தென்பட அண்மையில் சென்னை கலைவாணர் அரங்கில் சர்வதேச பெண்கள் விழா மிகக்கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

அம்மையாருக்குத்தான் எத்தனை எத்தனை பட்டங்கள்- எத்தனை எத்தனை வீரவிருதுகள் - எவ்வளவு பாராட்டு விழாக்கள் - அடடா பெண்கள் குலத்தைஉயர்விக்கவந்த வானதேவதையாகவே உருவகப்படுத்திவர்ணிக்கிறார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## நாடு கடத்தல்

(லண்டன்)

ரஷ்யா தூதுவராலயத்தின் உயர் அதிகாரி ஒருவரைப் பிரிட்டன் நாடு கடத்தியுள்ளது வேவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர் வெளியேற்றப்பட்ட போதும் வெளியேற்றப்பட்ட அதிகாரியின் விபரங்கள் வெளியிடப்படவில்லை

# அவுஸ்திரேலிய அமைச்சர் சீனா பயணம்

(பீகிங்)

அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் காரத் எவான்ஸ் பீகிங் பயணமாகியுள்ளார். வடகொரியாவிலுள்ள அணுவாயுத நிலையங்களை பரிசோதனைக்குஉட்படுத்துவது தொடர்பாக வடகொரியாவுக்கும் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கும் எழுந்துள்ள முரண்பாடுகளைத் தீர்த்தும் வகையில் சீன உதவ வேண்டும் என்பதே இவரது விஜயத்திற்கான நோக்கம்என்று கூறப்படுகிறது.

வடகொரியா தனது அணு ஆலைகளில் சர்வதேச அணுசக்தி ஏஜென்சி தடையின்றி சோதனையிட அனுமதிக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டு வருவது தெரிந்ததே

## பாலைதீவு ஆலயம் சேதம்

சுதேசிய திருநாட் கொண்டாட்ட

# பாதுகாப்பற்ற பகுதியில் குளிப்பதே ஆபத்தானது

### படை அதிகாரி எச்சரிக்கை

(கொழும்பு)
உயிரைவிட தனிப்பட்ட சொந்த சுகாதாரத்தை மேலாகக் கருதினால் அது ஒருவரைக் கொன்று விடும்; இது மற்றவர்களுக்கும் தொந்தரவாகி விடும் யுத்தப் பிரதேசத்தில் பாதுகாப்புப் பகுதிக்கு வெளியில் குளிப்பது தற்கொலைக்கு ஒப்பானது இவ்வாறு பாதுகாப்பு வட்டாரத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெலிஓயாவில் எற்ரம் பகல்வேளை பாதுகாப்பும் பிரதேசத்துக்கு வெளியில் நீரோடையில் குளிக்கச் சென்ற சிப்பாய் ஒருவர் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி இறந்தார் அவரைக் காப்பாற்றச் சென்ற சிப்பாய் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி விதத்திலேயே கொல்லப்பட்டார் இச்சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது என்று ஓர் உயர் இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி டெய்லிநியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சம்பவத்தை பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ஜெமுனு குலத்துங்கா உறுதி செய்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் எழுதப்பட்டுள்ளது.

---

### வெளிவாரி பரீட்சையில்
## மட்டு. மாணவர்கள் கண்டியில் தோற்ற வசதி

(கொழும்பு)
பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மட்டக்களப்பு மாவட்ட பரீட்சார்த்திகளை பேராதனையில் மேற்படி பரீட்சைக்கு தோற்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இப்பரீட்சை பேராதனை, கொழும்பு, மாத்தறை ஆகிய இடங்களில் நடைபெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இப்பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மட்டக்களப்பு மாவட்ட பரீட்சார்த்திகளுக்கு முன்னதாக மாத்தறையில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் இப்பரீட்சையை எழுதுமாறு அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## லஞ்சத் திணைக்களத்தில் 50 ஆயிரம் ரூபா மாயம்

லஞ்சத் திணைக்களத்தில் இரும்பு அலுமாரியில் பூட்டி வைக்கப்பட்டிருந்த 50,000 ரூபா பணம் மாயமாய் மறைந்துள்ளது. இந்த ரொக்கப் பணத்தை, லஞ்சமாகப் பெற்றவரிடமிருந்து திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியிருந்தனர். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வழக்குத் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படவிருந்த 50,000 ரூபா பணமே காணாமல் போயுள்ளது.

மகாவலி திட்டத்தைச் சேர்ந்த கனகசபாபதி கமலானந்தன் என்ற உதவிப் பொறியாளர் 50,000 ரூபா லஞ்சமாகப் பெற்றார் என்ற சந்தேகத்தின் பேரில் அவரிடமிருந்து இத்தொகைப் பணம் கைப்பற்றப்பட்டது; ஒரு ஒப்பந்த வேலைக்குச் சந்தேக நபர், முன்னுரிமை தருவதாகக் கூறி, வின்சென்ற் போல் என்பவரிடமிருந்து 50,000 ரூபாவை லஞ்சமாகப் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜோர்ஜ் சந்தப்பா முக்கியமான தடயப் பொருள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால், அவரை விடுதலை செய்யுமாறு விவாதித்தார். நீதிபதி தீர்ப்பு வழங்கும் திகதியைப் பிற்போட்டுள்ளார்.

---

### நிர்வாகிகள் தெரிவு

வண்ணை நாவலர் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்; தலைவராக ஐ. துரைராஜா உபதலைவர் கா. இராஜேஸ்வரன், செயலாளர் வி. தயாபரன், உபசெயலாளர் கே. சசிகுமார் பொருளாளர் இ. இரமேஷ் மற்றும் 12 குழு உறுப்பினர்களும் தெரிவாகினர்.

---

(குருநகர்)
பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்றான பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயம் இயற்கை சூழல் காரணமாகவும்-

கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாகப் பராமரிப்பு வேலைகள் நடைபெறாமல் இருந்து வருவதனாலும் சேதம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் அப்பகுதிக்குச் சென்று தங்கி தொழிலில் ஈடுபட்டுத் திரும்பியுள்ள குருநகர் மீனவர்கள் மேற்படி தகவலைத் தெரிவித்தனர்;

மேலும் அப்பகுதி காடு மண்டிய பகுதியாகக் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்;

வருடா வருடம் யாத்திரை செல்லும் பக்தர்கள் காடுகளை செப்பனிட்டு அவற்றில் விடுதிகள் அமைத்திருப்பது வழமையான ஒன்று.

அவை கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக நடைபெறாததால் அப்பகுதி காடு மண்டிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (21)

---

### 'மாற்றம்' வெளிவந்தது

தமிழ்த்தாய் மன்றத்தின் மாற்றம் காலாண்டு சஞ்சிகை வெளிவந்துள்ளது பிரச்சினைகளும் தீர்வுகளும் பெண்விடுதலை, புற்றுநோய் தமிழில் பெயர்த்து போல் எழுதலாமா பெண் உளவியல் மாற்கு எனும் ஓவியம் என்ற ஆக்கங்களும் புதிய கலாசாரங்கள் எனும் சிறுகதையும் இதில் பிரசுரமாகியுள்ளன


பவளவிழா 1994 - சித்திரை I
அரியாலை யாழ்ப்பாணம்.

எமது பாரம்பரிய சுதேசிய விளையாட்டுக்களுக்கு
புத்துயிர் அளிக்கும் முயற்சியில்

யாழ் மாவட்ட
மாட்டு வண்டிச் சவாரி
சங்கத்தின் அனுசரணையுடன்

மாபெரும்
மாட்டு வண்டிச் சவாரிப்
போட்டிகள்

சகல சவாரி வண்டில் உரிமையாளர்களையும் பங்குபற்றும்படி
அழைக்கின்றோம்.

இடம்:- அரியாலை மத்திய விளையாட்டு மைதானம்.
நேரம்: 10 - 4 - 94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு
போட்டிகள் 'A' 'B' 'C' என்னும் பிரிவுகளின் கீழ் நடைபெறும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10.4.94 முற்பகல் 10.00 மணி

விபரங்களுக்கு:
விளையாட்டு பிரிவு
பவளவிழா.

சோ. சோமலிங்கம்
அரஸ்கோ கட்டிடம்
அரியாலை யாழ்ப்பாணம்.
(இ-8999)

நூலகம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

கயமை புரியும் ஒவ்வொருவனும் ஒளியை வெறுப்பான்.

- விவிலியம்.

ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2033
தபால் பெட்டி எண் 05

## காட்டிக் கொடுக்கும் மானமற்றவர்கள்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம் இன்று ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து நிற்கும் தமிழர்களை, அண்மையில் தான் எழுதிய கட்டுரையில் மிகவும் வன்மையாகத் தாக்கியுள்ளார். ஐ.தே.க. இழைத்த கொடுமைகளை மறந்த மானமற்ற தமிழர்களே இன்று ஐ.தே.கவை ஆதரிக்கின்றனர் என்று அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

திரு. குமார் பொன்னம்பலத்தின் இக் குற்றச்சாட்டானது இன்று ஐ.தே. கட்சிக்குள் இருக்கும் தமிழர்களுக்கும், கொழும்பில் இருந்து கொண்டு ஐ.தே. கட்சிக்கு ஆதரவு அளித்து வரும் தமிழ்க் குழுக்களுக்கும் பொருத்தப்பாடானதாகும்.

1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் தமிழ்க் கைதிகளுக்கு நடந்தவற்றை சுட்டிக்காட்டியுள்ள குமார் பொன்னம்பலம், இக் காட்டுமிராண்டிச் செயலின் பின்னரும் ஐ.தே.கவை ஆதரிப்பதென்பது மானமற்ற செயல் எனத் தெரிவிக்கின்றார். குமார் பொன்னம்பலம் 1983ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதியை ஏன் எடுத்தார் என்று தெளிவாகத் தெரியாது. சிலவேளை அதற்குமுன் ஐ.தே.கவுடன் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸிற்கு இருந்த நட்புக் காரணமாக இருக்கலாம். ஆனால் குமார் பொன்னம்பலம் குறிப்பிட்ட உதாரணத்திற்குமுன்னும் பின்னுமாகவே தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், அவமானங்கள் என்பனவற்றை மனதில் நிறுத்திப் பார்ப்பவர்கள் பேரினவாதக் கட்சியான ஐ.தே.கவை ஆதரிப்பதென்பது மானமற்ற செயல் என்பது மட்டுமல்ல, வெட்கக் கேடான செயலும் ஆகும்.

1956இல் இருந்து தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட 'இனவெறியானது' பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் உயிரை மாத்திரம் குடிக்கவில்லை; தமிழர்களை நிர்வாணமாக வீதிகளில் அடித்துத் துரத்தியுள்ளது. தீயிட்டுக் கொளுத்தியுள்ளது. தமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்து அவமானப்படுத்தியுள்ளது. பல கோடிக்கணக்கான சொத்துக்களை அழித்துள்ளது.

இவை யாவற்றிற்கும் மேலாகத் தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்துள்ளது. தமிழர்தாயகக் கோட்

# தென்னாசியாவில் பிரிவினையைத் தூண்டும் நோக்குடையதல்ல தமிழீழப் போராட்டம்

## (இந்திய கொள்கை வகுப்பாளருக்கு 'விடுதலைப் புலிகள்' வலியுறுத்து)

இந்தியப் படைகள் தமிழீழத்தை விட்டு வெளியேறி இந்த மாதத்துடன் நான்கு வருடங்கள் முடிவடைந்து விட்டன 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி கடைசி இந்தியச் சிப்பாயும் திருகோணமலை துறைமுகத்திலிருந்து கப்பலேறியிருந்தான்.

1987ஆம் ஆண்டு யூலை 29ஆம் திகதி இந்திய - சிங்கள அரசுகளிடையே கைச்சாத்தாகிய இந்திய - சிறிலங்கா ஒப்பந்தமும் இவ் ஒப்பந்தத்தின்படி தமிழீழ மக்களின் அனுமதியில்லாமல் இந்தியப் படைகள் தமிழீழம் வந்தடைந்ததும் அதன் பின் நடந்த இந்திய - புலிகள் போரும் இந்திய அரசுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான அரசியல் - இராஜீக உறவுகளைத் துண்டித்திருந்தன.

இந்த உறவு சிதைவுக்கு மூலகாரணமாக இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்தின் பிரதான சூத்திரதாரியாக திரு. டிக்சிற் இருந்தார் என்பது அனைவரும் அறிந்த பழைய செய்தி.

திரு டிக்சிற்றின் மிரட்டல் இராஜதந்திரமும் அவரது தூரநோக்கற்ற உணர்ச்சி பூர்வமான அரசியல் பார்வையும் முற்றுமுழுதாக இந்திய நலனிலேயே அவர் குறியாக இருந்தமையும் இறுதியில் ஒரு பெரும் போரையே உருவாக்கி விட்டது இதில் 8000இற்கும் மேற்பட்ட தமிழீழக் குடிமக்கள் பலியாகினர். அத்துடன் என்றுமே திரும்ப பெற முடியாத அரும் பொருள்களைத் தமிழீழம் இழந்துவிட்டது. இந்திய அரசும் தனது படையில் 1000 இற்கும் மேற்பட்டவர்களை இழந்ததுடன் தனது கீர்த்தியையும் புலிகளிடம் பறிகொடுத்துவிட்டு நாடு திரும்பியது.

தமிழீழத்தில் இந்தியா சந்தித்த அந்த அரசியல் - இராணுவத் தோல்விகளுக்குப் பிரதான காரணம் தமிழீழத்தின் அரசியல் யதார்த்தத்தை அது கருத்தில் எடுக்காமையும் புலிகள் இயக்கத்தை அது பொருட்படுத்தாமையும்ஆகும் இந்த தவறுகளை இந்தியா இழைப்பதற்கு கணிசமான அளவில் பங்கு வகித்த டிக்சிற் அவர்கள், இப்போது - சுமார் ஏழு வருடங்களின் பின் - தமிழீழத்தின் அரசியல் யதார்த்தத்தை ஓரளவுக்காவது புரிந்து கொண்டவராகக் காணப்படுகின்றார். அண்மையில் டிக்சிற் அவர்கள் 'இந்து' பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் ஈழத் தமிழர் தொடர்பான அவரது புதிய பார்வையைக் காணக் கூடியதாக இருந்தது. ஈழத்தமிழர் அரசியலின் மைய சக்தியாக புலிகள் இயக்கம் இருப்பதையும் மக்கள் தலைவனாக தலைவர் பிரபாகரன் விளங்குவதையும் அந்தக் கட்டுரையில் திரு டிக்சிற் ஏற்றுக் கொண்டு எழுதியுள்ளார்.

இந்திய இராஜ தந்திர சேவையிலிருந்து இப்போது டிக்சிற் அவர்கள் ஓய்வுபெற்று விட்டாலும் கூட- அவர் கூறிய கருத்துக்களை இந்திய அரசின் உத்தியோகபூர்வ கருத்துக்களாக எடுத்துக் கொள்ள முடியாது என்றாலும் கூட - திரு. டிக்சிற்றின் கூற்றுக்கள் கூர்ந்து நோக்கப்பட வேண்டியவையாகும். அதுவும் இந்திய -சிறிலங்கா ஒப்பந்தம் உருவாவதில் பிரதான பங்கு வகித்த 'இந்து' பத்திரிகையில் டிக்சிற்றின் கருத்து வெளியாகியிருப்பது அதன் முக்கியத்துவத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்கியுள்ளது. ஈழத் தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டம் தொடர்பான இந்தக் கருத்து மாற்றம் இந்திய இராஜதந்திர வட்டாரத்துக்குள்ளும் பேசப்படுமானால் அது சிதைந்து போயுள்ள இந்திய - புலிகள் உறவைச் சீராக்க உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் ஈழத் தமிழரின் அரசியல் பிரச்சினைகள் சிறிலங்காவின் ஒற்றை ஆட்சிக்குள்தான் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்றும் அதுதான் இந்திய தேசிய நலனுக்கு உகந்தது என்றும் கூறி, இந்தப் புதிய பார்வைக்கு டிக்சிற் அவர்கள் ஒரு குறுகிய எல்லையையும் விதித்து விட்டார்.

ஈழத் தமிழர்களின் தன்னாட்சி உரிமைப் போரும், போராட்டத்தின் இறுதிவெற்றியும் இந்திய நலனுக்கு - இந்திய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகமாக அமைந்து விடும் என்ற இந்தியாவின் நீண்டகால அச்சம்தான் இவ்விதமான ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுக்க இந்தியக் கொள்கை வகுப்பாளர்களை தூண்டி வருகிறது.

பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து செல்ல முயன்ற போதும் இதே கருத்தை சில இந்திய தேசியவாதிகள் உரத்துக் கூறியிருந்தனர். பங்களாதேசின் பிரிவினை இந்திய மாநிலங்களில் ஒன்றான மேற்கு வங்காளத்திலும் பிரிவினைப் புயலை வீசச் செய்து விடும் என்று அவர்கள் வாதிட்டனர். இறுதியில் இந்தியாவின் நேரடி உதவியினால் பங்களாதேஷ் தனி நாடாகியது. அந்தப் புதிய தேசத்தின் உதயம் மேற்கு வங்கத்தை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை என்பது வரலாறு.

பங்களாதேஷ் மக்களைப் போன்றே தமிழீழ மக்களும் ஒரு இன அழிப்பிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்வதற்காகவே ஒரு தனி அரசை நிறுவப் போராடி வருகிறார்களே அல்லாமல், தென்னாசியப் பிராந்தியத்தில் பிரிவினைகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அல்ல என்பதை ,இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டம் இந்தியத் தேசிய நலனுக்கு விரோதமானது என்ற அச்சம் உண்மையில் மிகைப்படுத்தப்பட்டதென்பதுடன், நகைப்பிற்கிடமானதொன்றுமாகும் தேவையற்ற இந்த அச்சங்களையும் ஐயங்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு. ஈழத் தமிழரின் தன்னாட்சி உரிமையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்பதே, ஈழத் தமிழரின் பேரவாவாகும்.

நன்றி; விடுதலைப்புலிகள்

### கிழக்கு உள்ளூராட்சி சபை

## தேர்தல் மோசடி குறித்து 2ஆம் கட்ட விசாரணை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தலின்போது காத்தான்குடி, ஏறாவூர் பிரதேச வாக்களிப்பு நிலையங்களில் நடந்த மோசடிகள் குறித்து தொடர்ந்து விசாரணை நடத்துவதற்காக கொழும்பிலிருந்து தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மட்டக்களப்பு வந்துள்ளனர்.

இரண்டாம் கட்ட விசாரணை கடந்த வாரம் நடைபெற்றது இதன்போது மட்டக்களப்பு அரச அதிபர் எஸ். மோனகுருசாமி உதவி தேர்தல் ஆணையாளர் அருமைநாயகம் ஆகியோரும் அங்கிருந்தனர் மோசடி நடந்த வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றிய அதிகாரிகள் மேலும் விசாரிக்கப்பட்டனர்

## மாத்தளையில் கைதானோர்

# பாட்டாளி மக்கள் கட்சி ராமதாஸின் சொத்தல்ல

### - போட்டிப் பிரிவின் தலைவர் பண்ருட்டி

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி என்பது தொண்டர்களின் வியர்வையில் உருவானது. அது தலைவரின் தனிப்பட்ட சொத்து அல்ல. இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்களில் ஒருவரான பண்ருட்டி எஸ் ராமச்சந்தி

பளிக்கின்றோம். இது பொறாமைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை; அதனால் தான் வன்முறையில் ஈடுபடுகின்றனர். நாங்கள் தான் உண்மையான பாட்டாளி மக்கள் கட்சி என்பதை நீங்கள் நிரூபித்து விட்டீர்கள். நாங்கள் அரசியல்

யில் தனித்துப் போட்டியிட்டதால் அரசியல் அங்கீகாரமே இல்லாமற் போய்விட்டது. தொடர்ந்து தோல்வியைத் தழுவும் தலைவரை ஏற்றுக் கொள்ளலாமா என்று கேட்டு நாங்கள் அதை மாற்ற முயன்றோம். அவர் எங்களை

கத்தை கபளீகரம் செய்துள்ளது. தமிழர் தாயகக் கோட்பாட்டை சிதைப்பதில் விசேட கவனம் செலுத்தி வருகின்றது தமிழர் தேசியம் என்பதையே இல்லாமல் ஒழித்து விட திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது.

ஆனால் இந்நிலையிலும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும், ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள தமிழர்களும் அக் கட்சியை ஆதரிக்கின்றார்கள் என்றால் குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டது போல் அவர்களை மானமற்றவர்கள் எனக் கூறுவதில் தப்பு எதுவும் இருப்பதாக இல்லை.

ஆனால் குமார் பொன்னம்பலம் கூறியுள்ள வார்த்தை மட்டும் இவர்கள் செய்யும் துரோகத்தைக் குறிப்பதற்குப் போதுமானதா என்பதில் கேள்வி உள்ளது, ஏனெனில் அந்தளவிற்கு அவர்கள் தமிழினத்தைக் காட்டிக்கொடுத்து வருகின்றனர். கடைசியாக தென்மாகாணசபை தேர்தல் முடிவுகள் வெளிவந்த போது தமிழ்க்குழுக்கள் பலவும் கவலை அடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனெனில் தென்மாகாணத்தில் எதிரணியினருக்கு கிடைத்த தேர்தல் வெற்றியானது டி.பி. விஜேதுங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக கடைப்பிடித்த கொள்கைக்குக் கிடைத்த தோல்வி என்று கொள்ளப்படுகின்றது. இந்நிலையில் அரசாங்கம் சிலவேளை விடுதலைப்புலிகளுடனான எதிரான போரை நிறுத்திச் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுவிடுமோ என்பதே இத்தமிழ்க் குழுக்களுக்கு ஏற்பட்ட அச்சமாகும்.

அவ்வாறு ஐ.தே.க ஈடுபடுமானால் தமது அரசியல் வாழ்வும், சுகபோகமும் பறிபோய் விடும் என்பதே அவர்களின் கவலையாக இருந்தது. இந் நிலையில் தேர்தல் தோல்வியின் பின் முன்னைவிட மேலும் வரிந்து கட்டிக் கொண்டு ஐ.தே.க அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க அவை தயாராகவே உள்ளன. இந் நிலையில் குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டது போல் மானமற்றவர்கள் என்பதைவிட அதற்கும் மேலாக 'அரசியல் விபச்சாரிகள்' என்று இவர்களைக் கூறுவதே பொருத்தமானதாகும்.

ஆனால் இவர்கள் இன்று தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளும் காட்டிக் கொடுப்புகளுக்காக குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளது போல் ஒரு நாள் தமிழ்மக்களுக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்பது நிச்சயமே. ஆனால் இவர்கள் பதில் சொல்லும் வரை காலம் இவர்களுக்காகக் காத்திருக்குமா என்பதும் கேள்விக்குரியதே.

---

# ...மாத்தளையில் கைதானோர் தொடர்ந்தும் தடுத்துவைப்பு

## பொலிஸ் அறிக்கை கிடைக்கவில்லையாம்

(கொழும்பு)

வெளிமாவட்டங்களில் இருந்து மாத்தளைக்கு வந்து பொலிஸ் நிலையங்களில் தம்மை பதிவு செய்துகொள்ளாததினால் பொலிசாரால் கைது செய்யப்பட்ட 15 பேரில் 7பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு, கல்முனை, கிரான்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து இப் பகுதியில் வந்து தங்கியிருந்தவர்கள் ஆவர். இவர்கள் தொடர்பான பொலிஸ் அறிக்கைகள் அவர்கள் வசிக்கும் பகுதியில் இருந்து கிடைத்த பின்னரே இவர்களை விடுதலை செய்வது தொடர்பாக ஆராயப்படும் என பொலிசார் கூறியுள்ளனர். தற்போது இவர்கள் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் உள்ளனர்

---

## மெய்வல்லுநர் போட்டிகள்

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் கல்லூரி அதிபர் ந. பரமசிவம் தலைமையில் வட்டுக்கோட்டையில் இடம் பெற்றபோது சோழன் இல்லம் (சிவப்பு) 475 புள்ளிகளைப் பெற்று 1 ஆம் இடத்தையும், சேரன் இல்லம் (பச்சை) 415 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தையும், பாண்டியன் இல்லம் (மஞ்சள்) 373 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்தையும் வென்றெடுத்தன. (41)

ஃ ஃ

துன்னாலை வடக்கில் தேசிய சர்வோதய சிரமதானச் சங்க ஆதரவுடன் இயங்கும் பாலர் பாடசாலைகளுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றன

வல்லியான் சனசமூக நிலையப் பாலர் பாடசாலையின் மேற்படி விளையாட்டுப் போட்டிகள் நிலையத் தலைவர் திரு. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய சர்வோதய வெளிக்கள இயக்குநர் கி. சிவசுப்பிரமணியம், பருத்தித்துறை உதவி அரச அதிபர் செ. ஸ்ரீனிவாசன் உட்பட மற்றும் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர் பாலர்களின் விளையாட்டுநிகழ்வை அநேகர்கள் கண்டுகளித்தனர் (41)

---

## புலிகளின்குரல் வானொலி நிகழ்ச்சி நிரல்

1994-04-03 ஞாயிறு இரவு

8-01ற்கு-அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''உலகத் தமிழர்களை விழிக்கச் செய்த சாத்வீகத் தாய் அன்னை பூபதி
8-10ற்கு-இசையரங்கம்-நிகழ்ச்சியில் பாடுபவர் செல்வி ஸ்ரீவித்யா
8-30ற்கு-செய்திகள்
8-40ற்கு-தொடர்நாடகம்-இலங்கைமண் 20-ம்அங்கம்

1994-04-04திங்கள் காலை

7-02ற்கு-மாவீர வணக்கம்
7-15ற்கு-அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி தமிழ் ஈழத்தாய் பூபதி''
7-25ற்கு-மணி ஆரம்
7-45ற்கு-செய்திகள்
7-50ற்கு-பத்திரிகைச்செய்திகள்
7-55ற்கு-தாயகப்பாடல்.

---

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்களில் ஒருவரான பண்ருட்டி எஸ் ராமச்சந்திரன் தெரிவித்தார்.

கடலூர் பகுதியில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில், என்னைக் கட்சியிலிருந்து நீக்கியபோது ராமதாஸ் சொன்னார், 'என்னுடன் ஒரு நிழலும்கூடவராது' என்று ஆனால் இங்கு நிழல் விழாத அளவுக்கு கூட்டம் சேர்ந்துள்ளது

எங்களது அரசியல் பயணம் இனிமேல்தான் துவங்கும். நாங்கள் நினைப்பதை நீங்கள் கூறுகிறீர்கள் உங்கள் அன்புக்கு நான் அடிமை, தொண்டர்களுக்கு நாம் மதிப்

நாங்கள்தான் உண்மையான பாட்டாளி மக்கள் கட்சி என்பதை நீங்கள் நிரூபித்து விட்டீர்கள். நாங்கள் அரசியல் ஞானிகள். பெரியார் - அண்ணா - கருணாநிதி - எம். ஜீ. ஆர். போன்ற அரசியல்வாதிகளைப் பார்த்தவர்கள். எங்களது அனுபவம் அவர்களுக்குக் கிடையாது. என் வாழ்நாள் முழுவதும் உங்கள் நலனுக்காக வாழ்வேன். 1989-ம் ஆண்டு தேர்தலின்போது அ. தி. மு. க. தனித்துப் போட்டியிட்டபோது பா. ம. க.தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று சொன்னோம். அதை ராமதாஸ் செய்யவில்லை. 1991 தேர்தலின்போது வேறு கட்சியுடன் கூட்டணி வைக்கச் சொன்னோம். புதுவை

தழுவும் தலைவரை ஏற்றுக் கொள்ளலாமா என்று கேட்டு நாங்கள் அதை மாற்ற முயன்றோம். அவர் எங்களை வெளியேற்றி விட்டார்.

தி. க. விலிருந்து அண்ணாதுரை பிரிந்து வந்து வெற்றி பெறவில்லையா? தி. மு. க. விலிருந்து பிரிந்து வந்து எம். ஜீ. ஆர். வெற்றி பெறவில்லையா? பிளவு வேண்டும். அது நல்ல பிளவாக இருக்க வேண்டும். நல்லதை மக்கள் வரவேற்பார்கள். பிளவு என்பது பலவீனமானது அல்ல.

பலத்தைக் காட்ட கூட்டப்பட்டது அல்ல இம் மாநாடு. தமிழர்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்காக கூட்டப்பட்ட மாநாடு இது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

# தமிழக அரசுக்கு பத்திரிகைகள் கண்டனம்

(டில்லி)

எதிர்க் கட்சித் தலைவரின் அறிக்கைகளை வெளியிடும் பத்திரிகைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளமை பத்திரிகைகளை மிரட்டும் ஒரு செயலாகும் என்று இந்திய பத்திரிகை கவுன்சில்கண்டித்துள்ளது அத்துடன் இந்த அறிவிப்பை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வெளியிட்டிருப்பது அடிப்படை கருத்துரிமையை மறுக்கும் ஒரு செயலாகும் என்று புதுடில்லியில் கூடிய பத்திரிகை கவுன்சில் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்டதொருபத்திரிகை விளம்பரம் செய்வதை தமிழக அரசு வேண்டுமென்றே தடுத்துவைத்தமை பத்திரிகையின் நலனுக்கு ஊறு செய்யும் செயலாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

# புலிகள் மீதான தடை அ.தி.மு.க. தீர்மானம்

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு நீடிக்க வேண்டும் என்று மத்தியஅரசைக் கோரும் தீர்மானம் ஒன்றைத் தமிழக சட்டப் பேரவையில் அ. தி. மு. க. கொண்டு வரும் என கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும் மநில வருவாய்த் துறை அமைச்சருமான எஸ்-டி, சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்,

இப்போது அமுலில் உள்ள புலிகள் மீதான தடை எதிர்வரும் மே மாதத்துடன் முடிவுக்கு வருவது குறிப்பிடத்தக்கது,

---

## அமைச்சர் ராஜினாமா

(புதுடில்லி)

மத்திய அரசின் ரயில்வேத் துறை இணை அமைச்சர் கே.சிலங்கா தமது பதவியை நேற்று இராஜினாமாச் செய்துள்ளார். புதுடில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்

மாநிலங்களவையின் உறுப்பினர் பதவிக்காலம் முடிவடைவதற்கு சில நாட்களே இருப்பதால் தமது பதவி துறப்புக் கடிதத்தைப் பிரதமருக்கு ஏற்கனவே அனுப்பி விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்

## வகுப்பறையில் கத்திக் குத்து

கத்தி, கைத்துப்பாக்கியுடன் முகமூடியணிந்த நபரொருவர் வகுப்பறையில் பிரவேசித்து ஆசிரியரை வெளியேற்றிய பின்னர் மாணவிகளை காயப்படுத்தியுள்ளார். இச் சம்பவம் பிரிட்டனின் மிடில்ஸ்பரோ நகரில் இடம் பெற்றது. பன்னிரண்டு வயது மாணவி நிக்சி கொன்ரோய் வகுப்பறையில் கத்திக்குத்து காயங்களால் உயிர் நீத்தார். மற்றும் இரு மாணவிகள் காயமடைந்தனர்.

# இனப்பிரச்சினை குறித்து அரசின் கணிப்பு தவறு

## - தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர்

(கொழும்பு)

நாட்டில் பல ஆண்டுகளாக நிலவும் இப் பிரச்சினை ஓர் இனப்பிரச்சினை என்றும் இதனை மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளமையே தென் மாகாண சபை தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவாகி இருப்பதாக ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். நடேசன் தெரிவித்துள்ளார்.

அரசு இது ஓர் பயங்கரவாத பிரச்சினை என்றும் எனவே இதற்கு இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மக்கள் மத்தியில் இன எழுச்சியை கிளப்பும் வண்ணம் பிரசாரங்களை மேற்கொண்ட போதும், அதனை மக்கள் நிராகரித்து இங்கு இனப்பிரச்சினை இருப்பதாகவும் இதற்கு இராணுவ தீர்வு காண்பதை மக்கள் விரும்பவில்லை எனவும் இத் தேர்தல் மூலம் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

இதேவேளை அரசாங்கத்தின் கணிப்பு தவறானது இக் கணிப்பீட்டினால் நாடு சீரழிவையே சந்திக்கு மென்றும் ஆகவே இனப்பிரச்சினைக்கு சமாதான அரசியல் தீர்வே உகந்தது என மேல் மாகாண முதல் அமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்கா தெரிவித்ததை மக்கள் முழுமையாக ஏற்றுள்ளதாகவும் இது நாட்டின் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஓர் நல்ல சகுனமாக அமையும் என தான் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

சந்திரிக்கா குமாரணதுங்காவின் பேச்சு மேலும் நம்பிக்கை தருவதாகவும் எனவே தொடர்ந்து பொது ஜன ஐக்கிய முன்னணி இவ்வாறான உறுதியான கொள்கையின் கீழ் செல்வதை தான் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

## விபத்தில் படுகாயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஓராங்கட்டைச்சந்தியில் இடம்பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளோட்டி மயிரிழையில் உயிர் தப்பினார். பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் பின்னர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். புலோலி தெற்கு சாரையடியைச் சேர்ந்த இராஜேந்திரம் பாஸ்கரன் (வயது 19) என்பவரே காயப்பட்டவராவார். (25)

# அடுத்த தேர்தலில்சேவல் சின்னத்தில் இ. தொ. கா. இனி போட்டியிடும்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது சேவல் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என இ. தொ. கா. வின் நுவரெலியா மாவட்டத்தலைவர் பி. காந்தி தெரிவித்துள்ளார். கடந்தவாரம் நுவரெலியா இ. தொ. கா. அலுவலகத்தில் நடைபெற்ற கட்சிக்கூட்டத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

கடந்த தேர்தல்களில் ஐ. தே. க. சின்னத்தில் போட்டியிட்டதால்தான் நாம் எதையும் தன்னிச்சையாகச் செய்யமுடியாதுள்ளது. ஆகையால் எதிர்வரும் தேர்தல்களில் மலையகப் பகுதிகளில் இ. தொ. கா. சார்பில் சேவல் சின்னத்தில் போட்டியிடுவோம் என்றார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் தொண்டமான் 4 மாதங்களுக்கு முன்னர் எமது இ. தொ. கா. பலம் என்னவென்று அரசுக்கு உணர்த்துவதற்காக மத்திய மாகாண சபையில் நாம் செய்யத் துணிந்ததை ஒரு சிலரின் தலையீட்டால் செய்யமுடியாமல் போனது. ஆனால் இதை இன்று தென் மாகாண மக்கள் செய்து காட்டியுள்ளனர். என்றார்

# அன்னை பூபதி நினைவாக வடதமிழீழம்எங்கும் அஞ்சலிநிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக வன்னிப் பெரும் நிலப்பரப்பிலும் யாழ். குடாநாட்டிலும் சிறப்பாக அஞ்சலிநிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

யாழ். குடாநாடெங்கும் அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு வண்ண வண்ண கடதாசிகளினால் அலங்கரிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

தனியார், அரசகாரியாலயங்கள், பொது இடங்களில் தியாகியின் உருவப்படம் வைக்கப்பட்டு அன்னை பூபதியின் தியாகங்களை வெளிப்படுத்தும் பாடல்கள் இசைக்கப்படுகின்றன.

வன்னிப் பகுதியிலும் பல இடங்களில் அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி பெரியளவில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் பெரிய அளவில் ஈடுபடுகின்றனர்.

அன்னை பூபதியின் நினைவாக சிரமதானங்கள், அடையாள உண்ணாவிரதங்களும் இடம்பெறுகின்றன. (தி.பா)

## சுதந்திரப் பறவைகள் வெளியாகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் இதழின் பங்குனி - சித்திரை மாத இதழ் அனைத்துலகப் பெண்கள் நாள் சிறப்பிதழாக நாளை வெளிவருகிறது.

இவ்விதழ் சீதனக்கொடுமையை ஒழிக்க தமிழீழப் பெண்கள் போர்க்கோலம் என்ற தலைப்புச் செய்தியும் பெண்ணியம், பெண்கள்மீது வன்முறை எப்படி நடைபெறுகிறது. விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி ஜனா அவர்களுடனான பேட்டி, தமிழீழ நாட்டார் பாடல்களில் பெண்கள் ஆகிய ஆக்கங்களுடன் பள்ளி எழுந்திடுவீரே எனும் முதல் பரிசு பெற்ற சிறுகதையும் வெளியாகியுள்ளது.

**பங்குனின்**

க்கப்படமாட்டாது என யாழ் மாவட்ட நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

**மூன்று**

10) ஆகிய மூவரும் வீடு மெழுகுவதற்காக சாணம் அள்ளச் சென்றபோது தோட்டத்தில் இருந்த பயற்றங்காயைப் பிடுங்கிச் சாப்பிட்டதாகவும் அதை அடுத்து வாந்தி எடுத்து மயக்கமடைந்தனர் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை சிறுவர்கள் பிடுங்கிச் சாப்பிட்ட பயிற்றங்கொடிக்கு கிருமிநாசினி விசிறப்பட்டிருந்ததாலேயே இவர்கள் மயக்கமடையக் காரணம் என தெரியவருகின்றது. (இ)

## முதன்மை ஆசிரியர்க்கு

நல்லூர் யாழ்ப்பாணக் கோட்டத்திற்கான சகல முதன்மை ஆசிரியர்களையும் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கோட்டப் பணிமனைக்கு வருகை தருமாறு கோட்டக் கல்விப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. புலேந்திரன் கேட்டுள்ளார்.

**இந்தியாவிலிருந்து**

இம் முயற்சிகளை மேற்கொள்வதற்கு இலகுவாக தற்போது குடாநாட்டிற்குள் வந்துள்ள அகதிகளின் முழு விபரங்களையும் தருமாறு அகதிகளுக்கான ஐ. நா. ஸ்தாபனத்திடம் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (க, நி)

**ஜனாதிபதி**

தனது பயணத்தை தடுத்து நிறுத்தியமையானது தனக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானமாக முகமட் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், டி. பி. விஜேதுங்காவின் நடவடிக்கை குறித்து அதிருப்தி கொண்டுள்ள முகமட், அவர்மீது ஆத்திரம் கொண்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மேலதிக**

பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

**ரணில்**

டும் என முடிவு எடுக்கப்பட்டதாம்.

மேலும் பொதுச்செயலாளரான சிறிசேனகூரேயை பாதுகாக்கும்பொருட்டும் பொதுச் சபைக் கூட்டத்தில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக டி. பி. விஜேதுங்காவை நிறுத்துவது என எடுக்கப்பட்ட முடிவை மீள் பரிசீலனை செய்தல் வேண்டும் எனவும் நாளை நடைபெறும் கூட்டத்தில் வற்புறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இக் கூட்டத்தில் டி. பி. விஜேதுங்கா ஒரு பலவீனமான தலைவர் எனவும் இவரது பலவீனமே தென்மாகாண

## பெப்ரவரி மாதத்து ஒளிவீச்சு வெளிவந்தது

பெப்ரவரிமாத ஒளிவீச்சு வெளிவந்துள்ளது. நிதர்சன நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான இவ் வீடியோ சஞ்சிகை மணலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல், நல்லெண்ணத் தூதுக் குழுவினருடன் தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய பேச்சுவார்த்தைகள் தமிழீழ மக்களின் பேரபிமானத்தைப் பெற்ற ஈழநாதம் பத்திரிகையின் 4-ம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் கிராமியப் பாசறை நிகழ்வு உட்பட மேலும் பல பல்சுவை அம்சங்களையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

இவ் ஒளிவீச்சானது நாளை மாலை 6 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படவுள்ளதால் ஆர்வலர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

**சபாநாயகர்**

நாட்டின் மூன்றாவது உயர் பதவி வகிப்பவன் என்ற முறையிலும் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி பாராளுமன்ற சபாநாயகர் என்ற ரீதியில் செல்வது சாத்தியப்படாது

**நிவாரணம்**

ந்துள்ளனர்.

இத் தாமதம் குறித்து நமது செய்தியாளர் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரிடம் வினவியபொழுது அவர்கள் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அந்தந்த மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்கள் உரிய காலத்தில் விநியோகிக்கப்படுவதாகவும் ஆனால் சில பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் உரிய காலத்தில் அந்தப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் இவ்வாறான காலதாமதத்திற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே பொறுப்பு எனவும் அவர்கள்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கண்மணி சபாரெத்தினம்

புங்குடுதீவு, 2-ம் வட்டாரம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த (ஓடலி) சங்கரன் சபாரெத்தினத்தின் அன்பு மனைவி கண்மணி காலமாகிவிட்டார். இவர் இரத்தினமணி, காலம்சென்ற சந்திரதாசன், சிவநேசன் (நேசன் கடை, திருநெல்வேலி), பொன்மணி, சந்திரபாலன் (புங்குடுதீவு மகா வித்தியாலயம்), தவபாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலம் சென்ற மகாதேவன், மற்றும் கண்ணம்மா, கேதாரகௌரி, சின்னலிங்கம், புவனேஸ்வரி, சந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம் சென்ற வர்ணகுல சுந்தரம், இராமலிங்கம், சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரியும், முத்தம்மா, வள்ளிப்பிள்ளை, காலம் சென்ற நாகனாதி, மற்றும் நாகம்மா, செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியை சாயி அகம், கேணியடி திருநெல்வேலி இல்லத்தில் (ஞாயிறு) இன்று காலை 10.00 மணிக்கு (03. 04. 1994) நடைபெற்று, திருநெல்வேலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்

யாழ் ஸ்ரீதர் திரையில்
உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு
இன்று மட்டும்
மு. ப. 10.30, பி. ப. 2.30, மாலை 6.00 மணி
காட்சிகளாக-
ராஜேஷ், சரிதா நடித்த
குழந்தை ஏசு
(கலர்)

நேசன் கடை, ச. நேசன்
ஆடியபாதம் வீதி, (மகன்)
கோணியடி, திருநெல்வேலி. (7926)

## திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை)

உப்புக்கேணி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம் அவர்கள் 28-03-94 அன்று காலமானார். இவர் செல்லையா கனகலிங்கத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும், திரு. சின்னத்தம்பியின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மகளும், குருபரன் (U K), கிரிதரன் (யாழ். மருத்துவ பீடம், 10ஆம் அணி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். இறுதிக்கிரியைகள் இன்று (03-04-94) மாலை 4-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உப்புக்கேணி வீதி, தகவல்:
சாவகச்சேரி. (7931) கு. கிரிதரன்

இளைப்பாறிய அதிபர்

## திரு. ச. நீக்கிலாப்பிள்ளை

யாழ். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய முன்னாள் இளைப்பாறிய அதிபர் திரு. சவிரிமுத்து நீக்கிலாப்பிள்ளை 2-4-94 சனிக்கிழமை காலை காலமானார். இவர் அன்னமேரியின் அன்புக் கணவராவார். அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

21, கோவில் லேன், தகவல்:
நாவாந்துறை. நீ: அன்னமேரி
(7927) (அன்பு மனைவி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

என்று தெரிவித்ததாகவும், யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்கான பயணம் ஒத்திவைத்தமை போக்குவரத்து சிரமம்தான் காரணமென ஜனாதிபதி கூறிய காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அதனை தான் ஒருபோதும் ஏற்றுகொள்ள மாட்டேன் என முனைமட் தெரிவித்தார்.

எமது மக்களை கொல்வதன் மூலம் பிரச்சினை தீரபோவதில்லை. எனவே நாம் பேச்சுவார்த்தை செய்து இதற்கு ஓர் தீர்வை நாடவேண்டும் இதனை அரசாங்கம் செய்யவேண்டும். எதிர்க்கட்சி செய்ய வேண்டும் என ஒன்றை ஒன்று குற்றம் சாட்டாது எல்லோரும் கூறுகின்ற சமாதானப்பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை தீர்க்க வேண்டும். ஆனால் இதற்கு யாரும் முன்வருவதாக தெரியவில்லை.

தனது விஜயத்தின் நோக்கம் எந்தவொரு நிபந்தனை அற்ற ஓர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அடிகோலவே ஆகும் எனவும் அவர் தெரிவித்தார். இவ்வாறான ஓர் விடயத்தை என்னால் செய்யமுடியாததை இட்டு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். விடுதலைப் புலிகள் சமாதானம் பற்றிப் பேசுவதில் மிகவும் கரிசனையாக இருந்தார்கள் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறு இருந்தபோதும் விடுதலைப் புலிகளுக்கு தான் மிக விரைவில் யாழ்ப்பாணம் வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

### அகதிகளை

யுள்ளனர். இவ் வருடம் நாடு திரும்பியவர்களில் 2067 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டனர் எனவும் 1508 பேர் இன்னமும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதாகவும் ரெபியா தெரிவித்துள்ளது.

பொறுப்பு எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(தி), (பா)

### எனது அனுமதி

முதலில் தம்மிடம் முன் அனுமதி பெறவேண்டும் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்- எனவே தமது முன் அனுமதியைப் பெறாமல் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஆயத்தம் எதையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் அவர் சகலருக்கும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு வெளிநாட்டவர்விடுக்கும் அழைப்பு தொடர்பாக தாம் மிகவும் தெளிவாக இருப்பதாகவும் உத்தியோக பூர்வமாக இதை அறிவிக்கப்பட வேண்டுமெனவும் இந்த உள்நாட்டுப் பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடுவதையோ மத்தியஸ்தம் வகிப்பதையோ விரும்பவில்லை எனவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மூலம் கட்சி உறுப்பினர்களுக்கும் அமைச்சரவைக்கும் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் சிறிலங்காவின் சபாநாயகர் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த இருந்த ஒரு தருணத்தில் ஜனாதிபதி அதற்கு அனுமதி கொடுக்கவில்லை என்பது முன்னர் தெரியவந்ததே- அமைச்சர் தொண்டமானுக்கும் இது தொடர்பாக லண்டனிலிருந்து அழைப்பு வந்திருந்தமை தெரிந்ததே- எனவே ஜனாதிபதி தொடர்ந்து முழுமையாக இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டிருப்பதையே இந்த நிலைப்பாடு காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ரிதுபலவின்மேதென்மாகாண சபை தேர்தலின் தோல்விக்கான காரணம் எனவும் பல உறுப்பினர்கள் வற்புறுத்தி உள்ளனர். எனினும் அரசியல் அமைப்பு ரீதியில் அதிகாரம் கூடிய டி-பி-க்கு எதிராக செயற்திட்டங்களை கொண்டு வரமுடியுமா என்பது சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது என ஐவன் மேலும் தெரிவித்தார்-

### காமினி

இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கக் கூடாது என பல சிரேஷ்ட உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தென்மாகாண சபைத்தேர்தலின்போது கட்சி உறுப்பினர்கள் இவர் நடந்து கொண்ட விதம், பிரேமதாசாவின் கொள்கைகளை கடைப்பிடிக்க கட்சி தவறியமை, கட்சியை விட்டு வெளியேறியோர் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டமை போன்ற காரணங்களே தோல்விக்கான அடிப்படை என சில சிரேஷ்ட உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

காமினி திஸநாயக்கா, அனுரா பண்டாரநாயக்க, டாக்டர் ரஜீத்த சில்வா, றொனிடி மெல் ஆகியோரே தேர்தலில் முக்கிய பங்கு கொண்டனர் எனவே இத்தோல்வியானது கட்சிக்குரியது என்பதை விட மேற்படி உறுப்பினர்களுக்குக்கிடைத்த தோல்வி என்பதைத் தலைமைப் பீடம் ஏற்க வேண்டும் என்பதை சில சிரேஷ்ட உறுப்பினர்கள் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவர்களது இத்தகைய முரண்பாடான கருத்துக்களே கட்சியின் போது பெரும்சர்ச்சைகளைக் கிளப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(கலர்)
காண்பிக்கப்படும்
நாளை முதல்
THE KUNG FU KIDS
(கி-8993)

# மலிவு விற்பனை

## புடைவை வகைகள்

மிகக் குறைக்கப்பட்ட விலைகளில்
பல வர்ணப் புடைவை வகைகளும்
தைத்த ஆடைகளும்

02. 04. 1994 முதல்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

13. 04. 1994 புதன்கிழமை
ஈறாக ஞாயிற்றுக்கிழமை உட்பட
நாள்தோறும் காலை 7.00 மணி முதல்
மாலை 6.00 மணி வரை
இம் மலிவு விற்பனை நடைபெறும்,

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி
புடைவை விற்பனை நிலையத்துக்கு
ஒரு முறை விஜயஞ் செய்து பாருங்கள்

அரிய சந்தர்ப்பம்.

பொது முகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
1994-4-03 திருநெல்வேலி.
(கி-9004)